பெரியாருக்குப் பின்...

இயக்கம் ஒரு பரிசீலனை



பேராசிரியர் பெரியார்தாசன்

திராவிடர் கழகத்தினரின் விமர்சனத்துடன்

அன்புடன்

பெரியாருக்குப்பின் அவரது இயக்கம் ஒரு பரிசீலனை

பேராசிரியர்
பெரியார்தாசன்

K. A. பதிப்பகம்
59, ஆற்காடு ரோடு,
சென்னை-6000 24.

முதற்பதிப்பு ; ஜுலை 1985

காணிக்கை

பெரியாருக்குப் பின் பட்டி தொட்டியெல்லாம் பகுத்தறிவு சமதர்ம விளக்கப் பொதுக்கூட்டம் நடத்த அரும்பாடுபட்டு உழைக்கும் அருமைத் தோழர்களுக்கு இது காணிக்கை.

விலை ரூ. 2-50

தொகுப்பாசிரியர் :
திருமதி வாசுகி பெரியார்தாசன்

அச்சிட்டோர் :
எடிசன் ஆர்ட், சென்னை-24.

எழுதியவன்
எண்ணிப் பார்க்கிறேன்!

காட்டாற்று வெள்ளமாய்த் தமிழகத்தின் பழைய வரலாற்றுச் சிதிலங்களை அடித்து நொறுக்கப் பாய்ந்தவர் தந்தை பெரியார்.

ஏறத்தாழ ஒருநூற்றாண்டுக்காலம் பொதுவாக இந்திய அரங்கை-குறிப்பாகத் தமிழக-அரங்கை பேச்சால், எழுத்தால், போராட்டத்தால், உலுக்கி வந்தார் பெரியார்.

சமுதாயம், அரசியல், பொருளாதாரம் ஆகிய துறைகளில் காந்திய அழுக்குப்புரையோடிக்கிடந்த இந்த நூற்றாண்டை பகுத்தறிவுச் சமதர்ம வெளுப்புககு இலக்காக்கியவர் அவர்-

1925 முதல் 1973 வரை தமிழகம் பெரியாரின் ஆளுகைக்குட்பட்டிருந்தது.

அதற்குப் பின்...............

ஓ! பெரியாரின் இயக்கம் ஆட்டம் கண்டது.

அவரது இலட்சியம் திசைமாற்றம் கண்டது.

அவரது தொண்டர்கள் சிதறினர்.

அவரது எதிரிகள் தங்கள் பலத்துக்கான ஊட்டச் சக்தியை அவருடைய இயக்கத்தி லிருந்தே களவாடும் வாய்ப்பு ஏற்பட்டு விட்டது.

பெரியாரின் வெளிச்சக் கிரணத்தில் கண் கூசி இருட்டுக்குள் ஒளிந்துகிடந்த சநாதன மும் சமதர்ம விரோதமும் இன்று பகிரங்கமாய்த் தமிழகத்தில் வீதி உலா வருகின்றன.

நாலரைக் கோடித் தமிழரும் ஒரே குரலில் வகுப்புரிமையை ஆதரித்த நிலை மாறிப்போயிற்று. வகுப்புரிமையின் கழுத்தை நெறிக்கும்வரம்பு முறையை அந்த வகுப்பு ரிமையால் முன்னுக்கு வந்தவர்களே அறி முகப் படுத்தவும் ஆதரிக்கவும் ஆன இழிநிலை ஏற்பட்டு விட்டது.

கடவுளாவது கத்தரிக்காயாவது என்று மணிக்கணக்கில் பகுத்தறிவு விளக்கம் தந்த நாவலர்கள்—பாவலர்கள் இன்று மருவத்தூர்ச் சந்நதியில் மணியடிக்கப் புறப்பட்டு விட்டார் கள்.

விஞ்ஞானப் பகுத்தறிவின் வேகம் தணிந்து பண்டார விளக்கங்கள்படையெடுக் கின்றன.

தமிழக எல்லைக்குள் நுழையப் பயந்த ஆர். எஸ். எஸ். இன்று தன் மதவெறியாட்டத்

திற்குத் தமிழகத்தையே களமாகப் பயன் படுத்துகிறது.

ஓ! சமயச் சார்பற்ற நாட்டில் அரசு அலுவலகங்களில் கடவுள்—கடவுளச்சி படங்கள் இருக்கலாகாது— அவற்றைப் படிப்படியாய் அப்புறப் படுத்திவிடவேண்டும் என்று அரசாணை போட்ட தமிழ் நாடா இது?

மூகாம்பிகை அருளால் தான் அமெரிக்க டாக்டரின் மருந்து நோய்தீர்கக் முடிந்தது என்று பொறுப்புள்ளவர்களே பொறுப்பற்றுப் பேசுவதையும் பொறுத்துக் கொண்டிருக்கிறது தமிழ் நாடு.

திராவிட விவாசாய தொழிலாளர் சங்கம் வைத்துப் பெரியார் பாட்டாளிவர்க்கத்தைப் பொருள் முதல் வாத இயங்கியல் பாதையில் பயிற்றுவித்தத் தமிழ் நாட்டில்தான் தொழிற் சங்கச் சார்பில் பிள்ளையாருக்கு அபிஷேகம் நடககிறது.

இவ்வளவுககுப் பின்னும் பெரியாரின் தொண்டர்களால் நடைபெறும் இயக்கங்கள் தமிழ் நாட்டில் இயங்கிக் கொண்டுதான் உள்ளன.

உண்மைப் பெரியார் தொண்டர்கள் பகுத்தறிவே வாழ்வு—சமதர்மமே நெறி என்று ஏராளமானபேர் வாழ்வாங்கு வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றார்கள்.

இந்த உண்மைத் தொண்டர்களை உதாசீனப் படுத்துகிற தமிழகம யார்யாரை யோ பெரியார் தொண்டர்கள் எனவும் வாரிசுகள் எனவும் எண்ணி மயக்கத்தில் கிடக்கிறது.

வெள்ளையன் ஆட்சி மாறிக் கொள்ளை யர் ஆட்சி ஏற்பட்ட 1947—ஆகஸ்ட் பதி னைந்தை துக்கநாள் என்று சொன்ன பெரியாரை மறுதலித்து அவரை விட்டு— அவர் கொள்கையை விட்டு விலகிப் போன கூட்டம் எப்படி அவருடைய வாரிசுகளா வார்கள் என்பதைச் சிந்திக்கவே மறுக்கிறது தமிழகம்.

அந்த 'வாரிசுகளின்' வாரிசுகள் இன்று கடவுளைக் கண்டு பிடிக்க—சாதியைப் பிழைக் கவைக்க — பார்ப்பானின் கால் பிடிக்க— முதலாளித்துவத்தைப் பாதுகாக்க முயலும் போதெல்லாம் ஏச்சும் பேச்சும் பெரியாருக்கும் அவரது இயக்கத்துக்கும் தான் கிடைக்கிறது.

இதற்குக்காரணம் பெரியாருக்குப் பின் அவரது இயக்கங்கள் விட்ட சில பிழைகளே.

இந்தக்கட்டுரையில் நான் சுட்டிக்காட்டி யது இவைகளையே.

மூன்றாண்டுகளுக்கு முன் நான் சுட்டிய சில பிழைகள் சில இயக்கங்களால் திருத்தப் பட்டு விட்டன,

அன்று இல்லாத புதுப்பிழைகள் இன்று சில இயக்கங்களில் புகுந்துள்ளன.

எடுத்துக் காட்டுக்கு இரண்டு 1. தோழர் வீரமணியின் தி.க. இன்று செடியூல்டு மக களை அன்று போல் உதாசீனப் படுத்துவ—தில்லை.

2. அன்றுகொள்கையை முன்னிறுத்தி இயங் கிய பெரியார் சமஉரிமைக் கழகம் இன்று கட்சிநலன் கருதி கொள்கையைப் பலவீனப் படுத்திக் கொண்டு வருகிறது.

இப்படி பலப்பல-

பெரியாருக்குப் பின் அவரது இயக்கம் என்கிற இப்பரிசீலனை இத்துடன் முடிவடைய வில்லை.

இது 1982 ஜூலை நிலவரம் மட்டுமே.

இன்று எழுதினால் இந்நூலின் சில கருத்துக்க்ள் மாற்றம் பெறும்.

நான் மாற்றாமல் விடுகிறேன். ஏனெனில் நான் மாறியதற்கேற்ப—என் கருத்து மாற்றத் திற்கேற்ப இதன் உள்ளடக்கத்தை மாற்றுவது வரலாற்றுச் செய்தியைச் சரியாகச் சொன்ன-தாகாது.

பெரியாரின் இயக்கங்கள் சுயவிமர் சனத்தை எதிர்நோக்க வேண்டிய காலகட்டம் இது.

இத்தேவைக்கு இந்நூல் தூண்டினால் எழுதியதன் பயனை நான் பெற்றதாகப் பொருள்.

மாறாக இதை எழுதியதற்காக நான் விமர்சிக்கப் பட்டால் என் கருத்தை நிலை நாட்ட இன்னும் என் பேனாவில் மை உலராமல் இருக்கிறது.

தோழையுடன்

பெரியார்தாசன்

பெரியாருக்குப்பின்....

இந்திய நாட்டில் ஏறத்தாழ ஒரே சமயத்தில் மூன்று பெரும் இயக்கங்கள் தோற்றுவிக்கப்பட்டன. அந்த ஆண்டு 1925. பொருளாதார சமத்துவத்தை முதன்மைப் படுத்திய கம்யூனிச இயக்கம்,இந்துமதச் சிந்தனைகளை மையமிட்டுத் தொடங்கப்பட்ட ஆர்.எஸ்.எஸ் இயக்கம், சமுதாய மாற்றத்தை முக்கிய நோக்கமாகக் கொண்ட சுயமரியாதை இயக்கம். இந்த மூன்று இயக்கங்களில் சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கிய தந்தை பெரியார் அதைத் தொடங்கியதற்கான காரணத்தை இப்படி அறிவித்தார். ‘சாதி மதமென்ற கொடுமை ஒழிவதும், கடவுள் என்ற மூட நம்பிக்கை ஒழிவதும் மனித சமூகத்திற்கு நன்மையானது என்கின்ற கருத்தில்தான் சுயமரியாதை இயக்கத்தை ஆரம்பித்தேன்’, இந்த இயக்கத்தின் பணியால் சாதிமதக் கொடுமைகளும், கடவுள் என்ற மூடநம்பிக்கையும் ஒழிந்து விடுமானால், மனித சமூகத்தில் உள்ள போராட்டங்கள் பெரிதும் மறைந்து விடும். தனிப்பட்ட மனிதர்களுக்குள்ள குறைகள் நீங்கி விடும். தனக்கு என்கிற பற்றும் ஒழிந்துவிடும்’’ என்று அவர் நம்பினார்.

இந்த நம்பிக்கையுடன் தந்தை பெரியார். தொடங்கிய இந்த இயக்கத்தின்பால் கவர்ந்திழுக்கப்பட்ட இளைஞர்கள், படிப்பாளிகள், பொதுத் தொண்டில் ஆர்வமுடையோர் ஆகியவர்கள் எண்ணிக்கை நாளுக்கு நாள் வளர்ந்து வந்தது. இவற்றுக்குப் பழமைவாதிகளின் எதிர்ப்பு பெருகிக் கொண்டே வந்தது. இத்தகைய எதிர்ப்புகளுக்குப் பதில்

சொல்ல, இந்த இயக்கத்தவர் தங்கள் அறிவைக் கூர்மைப் படுத்திக் கொள்ள வேண்டியிருந்தது, தங்கள் சமூகப் பார்வையை அகலப்படுத்திக் கொள்ள வேண்டியிருந்தது, தங்கள் சிந்தனையை ஆழப்படுத்திக் கொள்ள வேண்டியிருந்தது. தங்கள் நோக்கத்தின் எல்லையை விரிவுப்படுத்திக் கொள்ள வேண்டியிருந்தது. இதனால் இந்த இயக்கத்தின் நோக்கும் போக்கும் பரிணாம வளர்ச்சி பெற்றன. கடவுள் ஒழிப்பு, மத ஒழிப்பு, ஆகியவை விரிவுபெற்று ஆதிக்க ஒழிப்பு, சுரண்டல் ஒழிப்பு, அரசமைப்புத் தகர்ப்பு என்கிற எல்லைகளுக்கெல்லாம் விரிந்து மார்க்சீயப் பாதையில் நடைபோடும் அளவிற்கு வளர்ந்தது. ஒரு கட்டத்தில் சுயமரியாதை இயக்கத் தலைவர் தந்தை பெரியாரும், கம்யூனிச இயக்கச் சிற்பி பெரியார் சிங்காரவேலரும் இணைந்து, தங்கள் இரு இயக்கங்களின் கொள்கைகளின் அடிப்படையில் சுயமரியாதைச் சமதர்ம வேலைத் திட்டம் ஒன்றை உருவாக்கி, அதை ஏற்றுக்கொண்டு செயல்படுத்தும்படி அப்போதைய இரு பெரும் அரசியல் கட்சிகளான காங்கிரசுக்கும், நீதிக் கட்சிக்கும் அனுப்பி வைக்கிற அளவிற்குச் சாதகமான சூழ்நிலை ஏற்பட்டது.

இந்த வேலைத் திட்டத்தை அந்தக் காலக் காங்கிரஸ் மறுக்கவும், நீதிக்கட்சியை ஏற்கவும், தந்தை பெரியார் நீதிக் கட்சியை ஆதரிக்கிற ஒரு வரலாற்றுத் திருப்பம் நேர்ந்து விட்டது. அதுவரை சுயமரியாதை இயக்கம் நீதிக்கட்சிக்கு எதிராக இயங்கி வந்தது என்பது குறிப்பிடத்தக்க வரலாற்றுச் செய்தியாகும். இந்தக் காலகட்டத்தில் பார்ப்பனர்கள் காங்கிரஸ் ஆதரவோடு பார்ப்பனரல்லாதோர் இயக்கமான நீதிக்கட்சியைத் தோற்கடித்துவிட்டனர். கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரனார் போன்ற தென்னிந்

தியத் தலைவர்களும், டாக்டர் அம்பேத்கார் போன்ற வட இந்தியத் தலைவர்களும் நீதிக்கட்சியின் தோல்விக்காக வருந்தினர். பார்ப்பனரல்லாதோர் இயக்கம் இப்படிப்பாழ் படுவதைக் கண்டு பதறினர். இதே நிலையிலிருந்த தந்தை பெரியார் சிறையில் இருக்கும் போதே சர். ஏ. டி. பன்னீர் செல்வம் போன்ற தலைவர்களால் நீதிக்கட்சியின் தலைவ ராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆக சமூக இயக்கமாகத் தொடங்கி, பொருளாதார சமத்துவத்தை நோக்கமாகக் கொண்டு இயங்கிவந்த சுயமரியாதை இயக்கம் பார்ப்பன ரல்லாதார் உணர்வு மேலோங்கி நீதிக்கட்சி என்கிற அர சியல் இயக்கமாக உருமாறிவிட்டது.

இப்படி இயங்கிய காலத்தில் அந்த இயக்கம் அண்ணா போன்றவர்களின் எழுத்தாற்றல், பேச்சாற்றல் ஆகியவற் றாலும், குத்தூசி குருசாமி போன்றோரின் செயலாற்ற லாலும் இமாலய வளர்ச்சி பெற்று வந்தது. இடையில் இயக்கத்திற்குள் புகுந்த மிட்டா மிராசுகள், சர்பட்டங்கள், சரிகை டர்பன்கள் ஆகிய பெருந்தனக்காரர்களுக்கு இயல் பான டாம்பீகம், இயக்கத்தில் பெருவாரியாய் இணைந்து விட்ட பாமரர்களோடு ஒத்துப்போக மறுத்து வீட்டது. இந்த நிலையில் தந்தை பெரியார் இதைப்பாமரர்களின் இயக்க மாகவே நடத்த விரும்பி, 'தோழர் அண்ணாதுரை' அவர் களின் பேரால் திராவிடர் கழகம் என்னும் பெயர் மாற்றத் தீர்மானம் கொண்டு வந்தார். படாடோப நீதிக்கட்சி பாமரர்களின், தாழ்த்தப்பட்டோர்களின், பின் தங்கிய மக்களின் திராவிடர் கழகமாக உருப்பெற்று விட்டது.

இந்த இயக்கம் ஆரிய மொழி, ஆரிய கலாச்சாரம், ஆகியவற்றை ஒழிக்கவும், தமிழ் மொழி, தமிழ்க்கலாச்சாரம்

ஆகியவற்றை வளர்க்கவும், தமிழர்களின் தன்மான உணர்வுக்கு வலுவூட்டவும், மூடநம்பிக்கை. சமுதாய இழிவு ஆகியவற்றை ஒழிக்கவும் முற்பட்டு மிகவும் வலிவோடு வளர்ந்து வந்ததால் பார்ப்பனரல்லாத தமிழர்களின் ஒரே பேரியக்கமாக நிலைபெற்று விட்டது. இந்த இயக்கத்தின் தாக்கம் அப்போது ஆட்சிப் பொறுப்பிலிருந்து பார்ப்பனர் நலத்துக்குப் பாடுபட்டுவந்த இராசாசிக்குக் கலக்கத்தைத் தந்தது. பிரிட்டிஷாருக்குப் பெரியாரிடத்தில் மதிப்பை ஏற்படுத்தியது. காங்கிரசோ, இராசாசியோ தமிழர்களின் நலனுக்கு கிஞ்சித்தும் உதவமாட்டார்கள் என்ற உணர்வு மககளுக்கு ஏற்பட்டது. தந்தை பெரியார் தமிழரின் முழுத் தலைவராக ஏற்கப்பட்டார். இந்த நிலையில் 1939-ல் இந்தியா முழுவதும் காங்கிரஸ் தன் ஆட்சியைக் கைவிட்டு (தலசுயஆட்சி) வெளியேறியது. இராசாசியும் பதவி விலகினார். (முதலமைச்சர் பதவி)அன்றையப் பிரதான எதிர்க்கட்சித் தலைவர் தந்தை பெரியார் அவர்களே. அவருடைய செல்வாக்கை கண்ட பிரிட்டிஷ் அரசு 1940-லும், 1942-லும்-இருமுறை கவர்னர் ஜெனரல்களையும், கவர்னர்களையும் அனுப்பி சென்னை மாகாண ஆட்சிப் பொறுப்பை ஏற்கும்படி அவரை கேட்டது. ஆனால், சமூக இழிவு ஒழிப்புப் பணிக்கு, பதவி ஏற்பு இடையூறாக அமையும் என்று கூறி பதவியைப் பெரியார் புறக்கணித்து விட்டார்.

பிரிட்டிஷார் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு முன் 14-6-1945, லார்டு வேவல் அவர்கள் இந்தியமக்களை 1. சாதி இந்துக்கள், 2. இஸ்லாமியர்கள், 3. சீக்கியவர்கள், 4. தாழ்த்தப்பட்டவர்கள், 5. அய்ரோப்பியர், என்ற பிரிவுகள்படியே அரசியல் காரணங்களுக்காக ஒப்புக்கொள்வதாக

வானொலிப்பேச்சில் அறிவித்தார். ஆனால் இறுதியில் பிரிட்டிஷார் வெளியேறும் போது இந்தப் பிரிவுகள்படி நாட்டைப் பிரிக்காமல், இந்தியாவை மத அடிப்படையில் இந்துக்கள்நாடு, முஸ்லிம்கள்நாடு எனக்கொண்டு, இந்தியாவின் பெரும்பகுதியை 'இந்துக்கள் நாடு' என்பதாகக் காங்கிரசார் வசமும் சிறு பகுதியான பாகிஸ்தானை முஸ்லிம்கள் வசமும் ஒப்படைத்து விட்டு வெளியேறினர். இதனால், இந்தியாவில் இந்துமதம், அதைக் களமாய்க் கொண்டு வளர்ந்த சாதீயம், அதனால் தோன்றி நிலைபெற்ற சமூக இழிவு, அதன் விளைவான ஏற்றத்தாழ்வு, சமத்துவமின்மை ஆகியவை குலையாமல் நிலைத்துவிட்டன. ஆக, பிரிட்டிஷார் விட்டுச் சென்றது. சுதந்திர நாடல்ல....அந்த நாள் துக்க நாள் என்று அறிவித்தார்.

அண்ணா போன்றவர்கள், தலைவரின் கருத்தை மறுத்து அந்த நாள் சுதந்திர நாளே என்று அறிவித்தனர். இயக்கத்தில் சலசலப்பு தோன்றியது. இது முற்றி வெடித்து 1949-ல் அண்ணா இயக்கத்தை விட்டு வெளியேறினார்.

அன்று முதல் 1973 வரை தந்தை பெரியார் பகுத்தறிவு, தன்மானம், சமூக இழிவு ஒழிப்பு, சமத்துவ சமுதாய அமைப்பு ஆகிய கொள்கைகளை முன்நிறுத்தி பொதுக் கூட்டங்கள், ஆண்டு தோறும் மாநாடுகள் நடத்தி வந்தார். அரசியலில் தமிழர் நலத்தை முன்நிறுத்தித் தன் ஆதரவை அளித்து வந்தார். பொருள் முதல் வாதம், இயங்கியல், ஆகியவற்றின் அடியொற்றி பாமர மக்களிடம் தன்மான உணர்வு, விஞ்ஞான வாழ்வு, சமத்துவம் ஆகியவற்றைப் பரப்பி வந்தார். இவ்வளவும் அரசியல் நீரோட்டத்தில் இணையாமலே செய்து வந்தார் பெரியார்.

இந்த நிலையில் 1973 டிசம்பர் 24-ல் மறைந்தார். இதற்குப் பின் பெரியாரின் தொண்டர்கள் சிலகாலம் அவர் கொள்கைகளைப் பிரசாரம் செய்வதில் தொடர்ந்து ஈடுபட்டனர். இந்த மக்கள் செல்வாக்குப் பெற்றச் சமூகப் பேரியக்கமும் மெல்ல மெல்ல பிளவுபடத் தொடங்கியது. அவ்வாறு பிளவுபட்டு இன்று ஆறு வேறு தலைமைகளின் கீழ்ப் பெரியார் தொண்டர்கள் இயங்கி வருகின்றனர். பெரியாரின் சொத்துக்களோடு இயங்கிவரும் திராவிடர் கழகம் பெருவாரியான பெரியார் தொண்டர்கள், புதிய வரவுகளான இளைஞர்கள் ஆகியோரால் நிரம்பி வழிந்து அதன் பொதுச் செயலாளரான தோழர் வீரமணியின் தலைமையில் விளம்பரம் பெற்ற அமைப்பாக இயங்கி வருகிறது. அவரால் வெளியேற்றப்பட்ட சிதம்பரம் கு.கிருட்டிணசாமி அவர்கள் தனியாக திராவிடர் கழகம் என்ற பெயரில் தன் வட்டத்தில் சில தொண்டர்களோடு இயங்கி வருகிறார். அவருடன் இருந்த தோழர் திருவாரூர் தங்கராசு அ.இ.அ.தி.மு.க சார்பாகத் தனித்து இயங்கி வருகிறார்.

இம்மூவரின் அமைப்புக்களும் தலைமைத் தகராறுடையவையேயன்றி, கொள்கை வேறுபாடுடைய பிளவுடையவை அல்ல. இவை மூன்றும் முதலாளித்துவச் சார்புடைய பார்ப்பன எதிர்ப்பு, பகுத்தறிவு இயக்கங்கள். தந்தை பெரியாரின் மக்கள் இயக்கத்தை இவர்க்ள் முதலாளித்துவ இயக்கமாய்ச் சுருக்கிவிட்டார்கள்.

இதில் விளம்பரம் மிக்க் தோழர் வீரமணியின் இயக்கம் தமிழகம் முழுவதும் கிளைகள் உடையதாய், அன்றாடம் கூட்டங்கள், மாநாடுகள், பட்டி மன்றங்கள் ஆகியவை நடத்தி வருகின்றது. விளம்பரம் பெறுவதற்காகச் செயல்பட்டு, செயல்பட்டு, செயல்பட்டதற்காக விளம்பரம் பெறும்

இவர்கள் சர்வ நிச்சயமாகச் சமதர்மவாதிகள் அல்ல. இவர்கள் முன் நிறுத்துவதெல்லாம் கடவுள் மறுப்பும், பார்ப்பன எதிர்ப்பு மட்டுமே. கடவுளும், பார்ப்பானும் ஒழிவதன் மூலமே சமதர்மம் தோன்றிவிடும் என இவர்கள் சாதிக்கிறார்கள். விவசாயப் போராட்டம், தொழிலாளர்களின் கூலி உயர்வுப் போராட்டம் ஆகியவையெல்லாம் இவர்களுக்கு உடன்பாடில்லாதவை. மில் முதலாளியைவிட கல் முதலாளியே (கடவுளே) எதிர்க்கப்படவேண்டியவன் என்ற கருத்துடைய இவர்கள் வேலை நிறுத்தத் தடைச்சட்டத்தை இரு கரம் நீட்டி வரவேற்றார்கள். அரசு கொண்டு வந்த கடன் நிவாரணச் சட்டத்தை ரத்து செய்யச் சொல்லித் தீர்மானம் போட்டார்கள்.

வகுப்புரிமையில் வலுவான நம்பிக்கையுள்ள இவர்கள் தமது இயக்கத் தலைமைப் பொறுப்புக்களில் தாழ்த்தப்பட்டோர்க்கு இட ஒதுக்கீடு செய்வதில்லை என்று இவர்களைக் குடியரசுக் கட்சியினர் குற்றம் சாட்டுகிறார்கள்.

கீழ்வெண்மணியின் கொலை பாதகமோ, திருப்பத்தூரில் நக்ஸலைட்கள் என்ற பெயரில் நடைபெற்ற போலீஸ் துப்பாக்கிச் சூடுகளோ, போலீசாரே நடுப்பகலில், மாயாத் தியாகியைக் கற்பழித்ததோ இவர்களைப் பாதிக்கவில்லை. இதைப் பற்றிக்கொஞ்சமும் பதறாத இவர்கள் தாருகாவனத்து ரிஷி பத்தினிகளைச் சிவபெருமான் கற்பழித்தது தவறா அல்லது கிருஷ்ணபரமாத்மா கோபியரோடு கொஞ்சியது தவறா என்று பட்டிமன்ற விவாதம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதற்குக் கட்டணம்வேறு வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள்.

பார்ப்பன ஆதிக்கத்தைப் படம்பிடித்துக் காட்டி தமிழக மக்களைத் தட்டியெழுப்பும் பெருந்தொண்டை இன்றும்

செழிப்பாகச் செய்யும் பாராட்டுக்குரியவர்கள் இவர்கள்தான். ஆனால் இவர்களின் பார்ப்பன எதிர்ப்பு எதிர்மறை Reactionary) உணர்வாய் இருக்கிறதே அல்லாமல் ஆக்க பூர்வமானதாக இல்லை. இவர்களின் பார்ப்பன எதிர்ப்பு வர்க்க உணர்வு அற்றதாக உள்ளது. இவர்கள் பார்வையில் டி. வி. எஸ். முதலாளியும் பார்ப்பனரே, கடற்கரையில் சுண்டல் விற்பவரும் பார்ப்பனரே ! இருவரும் எதிர்க்கப்பட வேண்டியவர்களே! பிறவியடிப்படையில் சாதிய உயர்வு இருக்கலாமா என்ற கேள்வியோடு தந்தை பெரியார் பார்ப்பன எதிர்ப்பைத் தொடங்கினார். ஆனால் இவர்களோ பார்ப்பனத் தன்மை உண்டோ இல்லையோ பார்ப்பனர்க்குப் பிறந்தவரெல்லாம் பார்ப்பனரே என்ற கண்ணோட்டத் தோடு இயங்குகின்றனர்.

தேர்தல் அரசியலைப்பற்றி தந்தை பெரியாருக்குத் தெளிவான கண்ணோட்டம் இருந்தது. பெரும் முதலாளி களிடம் பணம் வாங்கிக்கொண்டு அதைப் பயன் படுத்தி ஏழைப் பாமரர்களின் ஓட்டுக்களை வாங்கி ஆட்சிக்கு வருகிற கட்சிக்காரர்கள் முதலாளித்துவ சுரண்டலுக்கே துணை போவார்கள். இந்த உண்மையை முழுமையாக உணர்ந் திருந்ததால்தான் தந்தை பெரியார் அரசியல்வாதிகளை ஓட்டுப் பொறுக்கிகள் என்று நிராகரித்தார். ஒழிக்கப்பட வேண்டியவைகளுள் ஜனநாயகமும் ஒன்று என்றார். எந்த அரசியல் வாதியையும் சமுதாயநோயின் சரியான மருத்துவர் என்றோ, சர்வரோக நிவாரணி என்றோ தந்தை பெரியார் ஏற்றுக்கொண்டதில்லை.

ஆனால் அவருக்குப் பின் தோழர் வீரமணியின் தலைமை யில் இயங்கிக் கொண்டிருக்கும் தி. க. வினர் இந்த

கண்ணோட்டத்திலிருந்து வெகுதூரம் வந்து விட்டனர். தமிழ்ச் சமுதாயத்தின் நன்மைக்காக அரசியல்வாதிகளைப் பயன்படுத்திக் கொண்டிருந்த பெரியாரைப் போல் இல்லாமல் அரசியல்வாதிகளுக்கு இவர்கள் பயன் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். தேர்தலில் இவர்கள் நேரடியாக நிற்பதில்லையே தவிர, தேர்தல் காலங்களில் நடைபெறும் அனைத்துக் கூத்துகளிலும் இவர்கள் பங்கு மகத்தானதாக இருக்கின்றது. அரசியலைப் பொறுத்தவரை இவர்கள் தி. மு. க. வின் அங்கமாகவே இயங்கிக் கொண்டிருக்கிறார். கலைஞர் கருணாநிதி தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்புக்கு வருவது ஒன்றே இவர்களின் இலட்சியம் என்பது போலே நடந்து கொள்ளுகிறார்கள். தந்தை பெரியார் எந்த அரசியல் சக்தியிலிருந்து முற்றாக விலகியிருந்தாரோ அதில்இவர்கள் மூழ்கிக் கொண்டிருக்கிறார்கள் என்றே சொல்லலாம்.

சமுதாயத்திற்கு நன்மையானவற்றை செய்யும்போது பாராட்டுவதும், தீமையானவைகளைச் செய்யும்போது தாட்சண்யமின்றிக் கண்டிப்பதும் தந்தை பெரியாரின் வரைமுறைகளாக இருந்தன. ஆனால் தோழர் வீரமணியும் அவருடைய தி. க. வினரும் எது செய்தாலும் கருணாநிதியை பாராட்டுவதும், எம். ஜி. ஆரை எதிர்ப்பதும் தங்கள் முறையாக வைத்திருக்கின்றனர். முன்பு ஒரு சமயம் ஸ்டான்லி மருத்துவ மனையில் திடீர் பரிசோதனை செய்ய முதல்வர் எம். ஜி. ஆர். சென்றார், அய்யப்ப பக்தியில் ஊறித்திளைத்திருந்த மருத்துவர்கள் சிலர் நோயாளிகளுக்கு அய்யப்பன் விபூதியை வழங்கிக் கொண்டிருப்பதை பார்த்தார். அவர்களைக் கடுமையாக கண்டித்ததோடு நீங்கள் மருத்துவராய் இருப்பதை விட கோயில் பூசாரியாகப் போகலாம் என்றும் கோபித்திருக்கிறார். இந்த செய்தி வெளியான

வுடன் அவரை உரிய முறையில் வளைத்துப் போட்டிருந்தால் இன்று மூகாம்பிகையின் முதல் பக்தாராக அவர் ஆகாமல் ஒருவேளைத் தடுத்திருக்கலாம். பெரியார் இருந்திருந்தால் இதிலெல்லாம் நிச்சயம் கவனம் செலுத்தியிருப்பார். வெறும் பதவி வேட்டை அரசில் நடத்தும் கலைஞர் கருணாநிதியோடு அளவுக்குமேல் இவர்கள் ஐக்கியப்பட்டிருப்பது பகுத்தறிவு சுயமரியதை ஆகிய இவர்கள் கொள்கைகளுக்கே இழுக்கானது என்பதை இவர்கள் உணரவில்லை.

நேரு காலத்திலேயே அரசுயல் நிர்ணய சட்டப்படி பின்தங்கியவர்களுக்கு வழங்கப்படிருக்க வேண்டிய ஒதுக்கீடு மத்தியஅரசு கல்வி உத்தியோகத் துறைகளில் வழங்கப்பட்டவில்லை. கண்துடைப்பாக நேரு இந்த விவகாரத்தைப் பரிசீலிக்க காகா கலேல்கர் கமிஷன் என்ற ஒன்றை நிறுவினார். ஆனால் அரசியல் நிர்ணய சட்டப்படி அந்தக் கமிஷனின் அறிக்கையை பாராளுமன்றத்தில் வைத்து நடவடிக்கை எடுக்காமலேயே காலம் கடத்தி விட்டார். நாலாம் வருணமான சூத்திர வருணத்திற்கு உட்பட்டு, கடுமையான உழைப்புத் தொழில்களை கால காலமாய்செய்துவரும் சாதியினராக உள்ள பிற்படுத்தப் பட்வைர்கள் இந்தியாவில் எழுபது சதவீதத்திற்கும் மேலாக உள்ளார்கள். இவர்களில் பெரும்பான்மையானவர்கள் கல்வியிலும், சமூக அந்தஸ்திலும் பின்தங்கியவர்கள். இவர்களுக்கு மத்திய அரசாங்க கல்வி, உத்தியோகம் ஆகியவற்றில் அவர்கள் எண்ணிக்கைக்கேற்ப ஒதுக்கீடு வழங்குவது அவசிமும், அவசரமும் ஆகும். இதைத்தான் காகா கலேல்கர் கமிஷன் வற்புறுத்தியது. ஆனால் நேரு பகுத்தறிவு வாதியாக இருந்தும் மேல்ஜாதிக் காரராக இருந்ததாலோ என்னவோ, அந்தக் கமிஷன் அறிக்கை

யை செயல்படுத்தவே இல்லை. இது பெருவாரியான பின் தங்கியவர்களுக்கு நேரு இழைத்து விட்ட சமூக அநீதி யாகும்.

அவருக்குப் பின் பிரதமராக வந்த லால்பகதூர் சாஸ் திரியோ, இந்திராகாந்தியோ அந்த அறிக்கையை செயல் படுத்த அக்கறை கொள்ளவே இல்லை. நெருக்கடி நிலைக் குப் பின் வந்தத் தேர்தலின் போது ஜனதா கட்சியினர் அளித்த தேர்தல் அறிக்கையில் பின் தங்கிய மக்களின் ஓட்டைப் பெறுவதற்காக, தாம் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தால், காகா கலேல்கர் கமிஷன் அறிக்கையை அமுல் படுத்துவதாக வாக்குறுதி அளித்தனர். தேர்தலில் வெற்றி பெற்று ஜனதா ஆட்சிக்கு வந்தது; மொரார்ஜி தேசாய் பிரதமர் பொறுப்பெற்றார்; தந்தை பெரியாரின் உயிர் மூச்சு கொள்கைகளில் ஒன்றான வகுப்புரிமை கொள்கையில் ஈடுபாடு இருந்திருக்குமானால் தோழர் வீரமணியின் தி. க. வினர் மொரார்ஜி தேசாயை அணுகி அவர்கள் கட்சியான ஜனதா அளித்த வாக்குறுதிப்படி காகா கலேல்கர் கமிஷன் அறிக்கையை செயல்படுத்தும்படி வற்புறுத்தியிருக்க வேண் டும். இதற்கான எந்த முயற்சியும் செய்யாமல் தமிழ்நாட்டுக் குண்டுச்சட்டிக்குள் குதிரை ஓட்டிக்கொண்டிருந்தார்கள்.

அரசியல் நிர்ணய சட்டப்படி பிற்படுத்தப்பட்டவர்கள் யார் என்பது சமூக அந்தஸ்திலும் கல்விலும் பின்தங்கிய வர்கள் என்ற வரையறைப்படியே கணிக்கப்பட வேண்டும். இந்தப் பிரிவை அரசியல் நிர்ணய சட்டத்தில் சேர்ப்பதற் காக தந்தை பெரியார், சட்ட எரிப்புப் போராட்டத்தை தொடங்கி பல்லாயிரக்கணக்கான தி. க. தொண்டர்க ளோடு தானும் சிறை சென்று போராடி வெற்றி பெற்றார். இந்த அடிப்படையில் தமிழகத்தில் பிற்படுத்தப்பட்டோருக்

கான இடஒதுக்கீடு ஓரளவு செழுமையாக வழங்கப்பட்டுக் கொண்டு வந்தது. சமூக அந்தஸ்து, கல்வி (socially and educationally backward) ஆகிய வரையறைக்குப் பதிலாக பொருளாதாரத்தை வைக்க வேண்டும் என்று வெகுகாலமாக பார்ப்பனர்களும், மேல்சாதியினரும் கோஷமெழுப்பிக் கொண்டிருக்கின்றனர். பின்தங்கிய ஆடுகளுக்காக இந்த மேல்சாதி ஓநாய்கள் நீலிக்கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தனர். இந்த அநியாயக் கூப்பாட்டில் ஏதோ நியாயத்தைக் கண்டுவிட்டதைப் போல முதல்வர் எம். ஜி. ஆர். பிற்படுத்தப்பட்டோர் வரையறைக்கு ஆண்டு வருமானம் 9000 என்பதாக ஒரு உத்தரவைப் பிறப்பித்தார்.

இதை எதித்துப் போராடி கணிசமான வெற்றியும் பெற்ற பாராட்டுக்குரியவர்களில் தோழர் வீரமணியின் தலைமையிலே இயங்கும் தி. க. வினர் முதலிடம் வகிக்கிறார்கள். ஆனால் இதேவேகத்தை மத்திய அரசாங்க கல்வி உத்தியோகங்களில் பிற்படுத்தப்பட்டோருக்கு உரிய ஒதுக்கீடுபெற. காகா கலேல்கர் கமிஷன் அறிக்கையை செயல்படுத்தும்படி மத்திய அரசிடம் வற்புறுத்தி போராட இவர்கள் முயலவே இல்லை. இந்த பணியைச் செய்ய இவர்கள் இந்தியா முழுவதும் உள்ள பிற்படுத்தப்பட்டோர். தாழ்த்தப்பட்டோர் ஆகியோரிடம் தந்தை பெரியாரின் கொள்கைகளை அறிமுகப்படுத்தி அவர்களை ஒன்றிணைத்துப் போராடியிருக்க வேண்டும். இதில் இவர்கள் போதிய கவனம் செலுத்த வில்லை. அவ்வப்போது வடநாட்டுத் தலைவர்களை அழைத்து விளம்பர வேட்டுச் சத்தம் போட்டதைத் தவிர இவர்கள் வேறு எதையும் செய்ததில்லை

1978-ல் தந்தை பெரியாரின் நூற்றாண்டு விழா சார்பாக இலட்சக்கணக்கில் நிதி திரட்டிய போது இறுதிநாள் விழாவில் தோழர் வீரமணி வீராவேசமாக இப்படி அறிவித்தார். ''தந்தை பெரியாரின் நூற்றாண்டு விழா நிறைவுக்குள் (அதாவது 1979-க்குள்) தந்தை பெரியாரின் சிந்தனைகளை இந்தி போன்ற வட மொழிகளில் மொழிபெயர்த்து வெளியிடுவோம். அய்யாவின் கொள்கைகளை இந்தியா முழுவதும் பரப்புவோம்.'' ஆறு ஆண்டுகள் கடந்து விட்டன.

தந்தை பெரியார் தாழ்த்தப்பட்டவர்களுக்கு அவர்களின் தாழ்நிலைக்குக் காரணம் யார் என்பதை அடையாளம் காட்டினார். குனிந்திருந்த அவர்களின் முதுகுத்தண்டு நிமிரும் வண்ணம் உணர்ச்சியூட்டினார். பிற்படுத்தப்பட்டோரிடம் தாழ்த்தப்பட்டவர்கள் பெறவேண்டிய சமூக நீதியை, சமத்துவ உரிமையை வெகுவாக வலியுறுத்தினார். டாக்டர் அம்பேத்காரின் கொள்கைகளை விளக்கினார். பொது எதிரியான மேல்சாதிக்காரர்களின் ஆணவத்தை, பிறப்பு உயர்வுக் கருத்தை, ஆதிக்கத்தை தாழ்த்தப்பட்டோர்—பிற்படுத்தப்பட்டோர் இருதரப்பாரும் உணர வழி செய்தார். இதன் மூலம் இந்த இரு நிலையினரும் இணைந்து பொது எதிரிகளிடம் போராடவும், தங்களுக்குப் பிணங்காமல் வழி கண்டார். இந்தப் பணியில் தோழர் வீரமணி தலைமையில் இயங்கும் தி. க. வினர் போதிய ஆர்வம் காட்டாததால் பொது எதிரிகளான மேல்சாதியினர் தப்பித்து போகவும், தாழ்த்தப்பட்டோரும், பிற்படுத்தப்பட்டோரும் தங்களுக்குள் மோதிக் கொள்ளவுமான ஓர் இழிநிலை தமிழகத்தில் ஏற்பட்டுவிட்டது.

தந்தை பெரியாரின் மறைவுக்குப்பின் இவர்களால் பல் வேறு காரணங்களுக்காக இயக்கத்திலிருந்து வெளியேற்றப் பட்டவர்கள் தனி இயக்கங்களமைத்தோ, தனிப்பட்ட முறை யிலோ தந்தை பெரியாரின் கொள்கை பரப்பும் பணியில் ஈடுபட்டுள்ளார்கள். இவர்கள் அவர்களைக் காழ்ப்புணர்ச்சி யோடே பார்த்து. அவர்கள் மீது அவதூறு பரப்புதல், துரோகிகளென தூற்றல், அவர்களின் கொள்கை வழிச் சாதனைகளுக்குக் குந்தகம் விளைவித்தல், இருட்டடிப்பு செய்தல் ஆகியவற்றில் தாராளமாக ஈடுபட்டு வருகிறார்கள். தந்தை பெரியாரின் கொள்கை பரப்புதல் — செயலுக்குக் கொண்டுவருதல் ஆகியவற்றில் ஈடுபடும் இயக்கங்களை இவர்கள் சகோதர இயங்கங்களாக மதிப்பதேயில்லை.

மேலும் சாதி ஒழிப்புப் பணிகளான கலப்புமணம் ஆகிய வற்றில் இவர்கள் அணியின் தொண்டர்கள் உளமார்ந்த அக்கறை காட்டுவதில்லை. அப்படி அக்கறை காட்டுவோர் தோழர் வீரமணியின் இயக்கத்தினரால் போதிய அளவு ஊக்குவிக்கப்படுவதில்லை. மொத்தத்தில் தோழர் வீரமணி யின் தலைமையில் இயங்கும் பெரியார் தொண்டர்களின் தி.க. வெறும் விளம்பர படோடோப இயக்கமாகவே உள்ளது.

மதமாச்சாரியங்களில் மூழ்காமல் தமிழக மக்கள் சகோ தரர்களாய் வாழத் தந்தை பெரியாரின் இயக்கம் ஏறத்தாழ அறுபதாண்டுக்காலம் பெரும் பணியாற்றி வந்தது. வடக்கே நடைபெறுகிற மதக்கலவரங்களின் தாக்கம் தமிழகத்தைத் பாதிக்காமல் இருந்தது. மக்களின் மத உணர்ச்சி மதவெறி யாய்ப் பரிணமிக்காமல் தந்தை பெரியார் பரப்பி வந்த பகுத் தறிவு, வேகத் தணிவாகப் (Speed breaker) பணியாற்றி

வந்தது. ஆனால் அவருடைய மறைவுக்குப் பின் இங்கு மிக அதிக அளவில் பரவ முயலும் ஆர்.எஸ்.எஸ். என்கிற இந்து மதச் சனாதன வெறி இயக்கம் பல்வேறு செயல்களால் மதவெறி விஷ விதைகளைத் தூவி விட்டது. இதற்குப் பல மடாதிபதிகள் நீர் தெளித்தனர். பல பார்ப்பனப் பத்திரிக்கையாளர் உரமிட்டனர். இங்கேயும் வட நாட்டைப்போன்ற மதக் கலவரங்கள் மண்டைக்காடாய், புளியங்குடியாய் வெடிக்கத் தொடங்கிவிட்டன.

இந்த நேரத்தில், இந்த மதவெறி விஷப்பயிரை வேரோடு கல்லியெறியும் பணியில் தோழர் வீரமணியின் தலைமையில் இயங்கும் தி.க.வினர் தம்மை முழுமையாக ஈடுபடுத்திச் கொண்டுள்ளமை பெரிதும் பாராட்டிற்குரிய செயலாகும். இதற்காக இவர்கள் பொதுக் கூட்டங்கள், மாநாடுகள், ஆர்.எஸ்.எஸ். எதிர்ப்புக்கூட்டம் ஆகியன நடத்துகிறார்கள். அண்மையில் கூட தோழர் இராசேந்திரன் என்பாரைக் கொண்டு தகுந்த ஆதாரங்களுடன்ஆர்எஸ்.எஸ், இயக்கத்தின் அபாயத்தைப் பற்றி விரிவான விவரங்களடங்கிய நூலை மலிவு விலையில் வெளியிட்டு மக்களிடம் பரப்பி வருகிறார்கள். இப்படி இவர்கள் செயல்படவில்லையானால. ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தின் இந்து மத வெறித்தனமான கோரைப் பற்களுக்குள் தமிழகம் சிக்கி சீரழிய ஏதுவாகும்.

ஆனால் ஆர்.எஸ்.எஸ், போன்ற இயக்கங்கள் பொய்யான, போலியான நடைமுறைக்கு ஒவ்வாத அகண்ட இந்து ராஷ்டிரக் கோட்பாட்டை வைத்துக்கொண்டே அசுர வேகத்தில் பரவுகின்றனவே! அவற்றின் சூட்சுமம் என்ன என்பதை இவர்கள் உணர்ந்ததாகத் தெரியவில்லை, இளமையிலேயே—சிறுவர்களாயிருக்கும்போதே பிரச்சாரத்

தின் மூலமும், நூல்கள் மூலமும் மக்களை ஈர்த்துத் தம்முள் இந்த ஆர்.எஸ்.எஸ். இயக்கம் ஐக்கியப்படுத்தி விடுவதால் தான் அதன் நோக்கம் கேடானதாக இருப்பினும் அதன் வளர்ச்சி அதிசயிக்கத்தக்கதாய் இருக்கிறது. இந்தப் போக்கைத் தோழர் வீரமணியின் தி.க. தன் இயக்க வளர்ச்சிக்குப் பயன்படுத்திக் கொண்டு குழந்தைகளுக்கான பகுத்தறிவு நூல்கள் வெளியிடல் இளைஞர்க்கான தந்தை பெரியார் கொள்கை விளக்க முகாம்கள் நடத்தல் ஆகியவற்றைச் செய்ய முயலாவிடில் ஆர். எஸ். எஸ். இயக்க வளர்ச்சிக்கு நிரந்தரத் தடை ஏற்படுத்த முடியாது. சில ஆண்டுகள் தோழர் வீரமணியின் தி.க.வினர் கொள்கை விளக்கப்பயிற்சி முகாம் நடத்துவதுண்டு. அவை பெரும்பாலும் கொள்கைகளை முன்னிறுத்தாமல் பழம்பெருமை பேசுவதாகவும் தோழர் வீரமணியின் ஜகதலப்பிரதாபத்தை வெளிச்சம் போடுவதாகவுமே இருக்கும். தந்தை பெரியாரின் கொள்கைகளை நூல் வடிவில் எளிய விலையில் பரப்புவதில்கூட அண்மையில் இவர்கள் கவனக் குறைவாக இருந்து வருகின்றனர், மேலும் இவர்களின் விடுதலை நாளிதழ் பெரும்பாலும் தோழர் வீரமணியின் விளம்பர இதழாகவும், மாலையில் ஒலிக்கும் முரசொலியாகவுமே இருந்து வருகிறது. சுருக்கமாகச் சொல்வதானால் தந்தை பெரியாரின் கொள்கைக்கெதிரான மதவெறி இயக்கமான ஆர்.எஸ்.எஸ்ஸின் அண்மைக்கால வளர்ச்சிக்கு ஈடு கொடுக்கக்கூடிய அளவுக்கு இவர்களின் பணி அமையாதது பேரிழப்பே.

மேலும், தோழர் வீரமணியை அவருடைய தொண்டர்கள் தமிழர் தளபதி என்றும், மானமிகு ஆசிரியர் என்று

விளித்து உயர்த்தி, உச்சிமோந்து, கைகட்டி, வாய்பொத்தி சேவகம் புரிந்து அவரை ஏறத்தாழ ஒரு மடாதிபதியாகவே ஆக்கிவிட்டார்கள். அவரும் இந்நிலையைப் பெரியார் போல வெறுத்து ஒதுக்காமல் விரும்பி ஏற்றுப் பூரித்துப் புளகாங்கிதம் அடைகிறார். தந்தை பெரியாரின் பல்லாண்டு காலத் தொண்டுக்கும், அனுபவத்துக்கும் வரலாற்றை உருவாக்கிய அவர் தமைமைக்கும், தமிழக மக்கள் அவரைத் தேரில் வைத்து இழுத்ததும், எடைக்கு எடை பொருள் வழங்கி மகிழ்ந்ததும், இயல்பாய், பொருத்தமாய் ஏற்புடையதாய் இருந்தது. ஆனால் இவையாவும்இன்று தோழர் வீரமணிக்கு அவருடைய ஆதரவாளர்களால் செய்யப்படும்போது செயற்கையாய், போலியாய், தேவையற்றதாய் இருக்கின்றது. இந்த நிகழ்ச்சிகள் தந்தை பெரியாரின் பகுத்தறிவு சம உரிமைக் கொள்கைகளுக்கு முற்றிலும் முரண்பட்டவையாக இருக்கின்றன.

தந்தை பெரியார் அவர்கள் 1900லேயே தன் மண்டிக் கடையில்பணியாற்றிய தொழிலாளர்களை, மனிதாபிமானத்தோடு நடத்தினார். அவர்கள் தேவையை உணர்ந்து, அவர்களைத் தொழிலாளிகளாக நடத்தாமல் கூட்டாளிகளாக நடத்தி இலாபத்தில் பங்கு அளித்து ஊக்குவித்தார். தன்னளவில் தான் செயற்படுத்தி வந்த இக்கொள்கையையே பின்நாளில் தன் பொருளாதாரக் கொள்கையாகப் பிரகடனப்படுத்தினார். ஆனால் தோழர் வீரமணியின் ஆளுகையின் கீழ் உள்ள பெரியார் திடல், விடுதலை அலுவலகம், நூலகம் ஆகியவற்றில் பணியாற்றும் தொழிலாளர்கள் நடத்தப்படும் விதம் மனிதாபிமானமற்றது, மிருகத்தனமானது. தந்தை பெரியாரின் கொள்கைகளுக்கு முற்றிலும் விரோதமானது.

பி.ஏ. பாஸ் செய்த ஒரு இளைஞன் நூலக வேலை—'ப்ரூப்' திருத்தும் வேலை ஆகிய அனைத்து வேலைகளையும் காலை 7 மணி முதல் இரவு 8 மணி வரை செய்தாலும் மாதச் சம்பளம் ரூபாய் தொண்ணூறுதான். இந்த 'கவர்னர்' உத்தியோகத்திற்கே ஏகப்பட்ட சிபாரிசுகள் தேவை. சமுதாய நன்மைக்கும் மனிதத் தேவைக்கும் ஏற்ப சட்டங்களை மாற்ற வேண்டும் என்பது தந்தை பெரியாரின் கொள்கை. ஆனால் தோழர் வீரமணி தி.க.வினரோ திடலில் பணியாற்றும் தொழிலாளர்களின் கோரிக்கைக் குரல்வளையை நெறிக்க சட்டத்தின் சந்து பொந்துகளிலெல்லாம் நுழைந்து ஆயுதங்களைத் தேடும் ஆற்றல்மிக்க வழக்கறிஞர்களாகி உள்ளனர். தொழிலாளர்கள் விவகாரத்தில் இவர்களுடைய போக்கு பொதுவாக சுரண்டல் வர்க்கச் சார்புடையது—தந்தை பெரியாரின் கொள்கைக்கு விரோதமானது. இந்த அடக்குமுறை அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் இவர் பொறுப்பில் இயங்கும் பள்ளிகள், பாலிடெக்னிக்குகள், விடுதிகள் போன்ற எல்லா நிறுவனங்களிலும் உண்டு. இந்த குணம் கடைந்தெடுத்த முதலாளித்துவ குணம் அல்லவா?

இந்த முதலாளித்துவ குணத்தின் விளைவாகத்தான் தோழர் வீரமணியின் தி.க.வினர் அய்,எம்.எப். கடன் நிபந்தனைகட்குட்பட்டு பிரதமர் இந்திராகாந்தி சென்ற ஆண்டு திடீரென்று கொண்டுவந்த தொழிலாளர் நல விரோதச் சட்டமான வேலை நிறுத்தத் தடைச் சட்டத்தை இருகரம் நீட்டி வரவேற்றனர். ஓராண்டுக்கு முன்னரே இப்படியொரு சட்டம் வரவேண்டும் என்று தீர்மானம் போட்டது நாங்களே என்று விடுதலையில் கட்டம்கட்டி விளம்பரப்படுத்தி பூரித்தனர்.

பிற்படுத்தப்பட்டோர்க்கும், பார்ப்பனர்க்குச் சமமாய்
உத்தியோகம் கிடைக்க வகுப்புரிமையை வலியுறுத்தும்
தோழர் வீரமணியின் தி.க.வினர் எல்லோருக்கும் வேலை
வாய்ப்பு உண்டாக்கப்பட திட்டம் ஏதும் வைத்திருக்க
வில்லை. இந்த முதலாளித்துவச் சமுதாயத்தில் குறைந்த
வர்களிடம் குறைந்த கூலிக்கு நிறைய வேலை வாங்குதல்
என்னும் அடிப்படையில், வேலையில்லாத் திண்டாட்டம்
செயற்கையாகத் தோற்றுவிக்கப்பட்டுப் பேணிப் பாதுகாக்கப்
படுகிறது என்பதை வர்க்கக்கண்ணோட்டத்துடன் இவர்கள்
உணரவேயில்லை. இதனால்தான் வேலையற்ற இளைஞர்
களை ஒன்று திரட்டி மாபெரும் அளவில் நடத்தப் போவ
தாக இவர்கள் 1978 ஏப்ரலில் பிரமாதமாக விளம்பரப்
படுத்திய வேலையில்லா இளைஞர் பேரணியை இந்த 1985
வரையிலும் நடத்தவேயில்லை.

இதுபோன்ற பெரிய செய்திகளில் மட்டுமின்றி கலை-
இலக்கியம் போன்ற இலகுவான விஷயங்களில் கூடதோழர்
வீரமணியின் இயக்கத்தினர் சொன்னபடி செய்வதில்லை
தந்தை பெரியாருக்கு இருந்த சிறப்புக்களில் ஒன்று, செய்த
தையே—சொல்லி சொல்லியதையே செய்து வாழ்ந்தது.
கூட்டங்களுக்கு ஒப்புக்கொண்டால் எவ்வளவு தடைகள்
இருப்பினும்—அன்பு மனைவி நாகம்மையார் இறந்தபோது
கூட—தவறாமல் கூட்டத்திற்கு சொன்னபடி சென்றவர்
தந்தை பெரியார். அய்யாவின் கொள்கைகளை மையப்
படுத்தி காப்பியம் ஒன்று எழுதச் சொல்லி போட்டி வைத்து-
தேர்ந்தெடுக்கப்பட்ட காப்பியத்தை வெளியிடுவதாக விளம்
பரப்படுத்தினர். காப்பிய நாடகம் அரங்கேறி-தோழர் பாரி
என்பவரின் காப்பியம் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்

பட்டுப் பல ஆண்டுகள் ஆகியும் இன்னும் அப்படியொரு
பியம் வெளியாகவே இல்லை.

இவ்வளவிற்கும் காரணம் தந்தை பெரியாரின்
வங்கள் இவர்களால் முழுமையாகப் புரிந்துக் கொள்ளப்
மையும், ஈடுபாட்டோடு அவைகளைச் செயல்படுத்த இ
களுக்குள் ஒரு வெறி எழாமையும்தான். ஆனால் தந்
பெரியாரின் தொண்டர்களாகவும், அவர் கொள்கை
பால் அசைக்க முடியாத பற்றுடையவர்களாகவும் உ
யலர் இப்போது இந்த இயக்கத்திலிருந்து விலகி வெவ்
இயக்கங்களாகச் செயல்பட்டு வருகின்றனர். அவ
விளம்பரமற்றவர்களாய், பணபலமற்றவர்களாய், தொ
படை குறைவாயுள்ளவர்களாய் இருப்பினும் பெரிய
கொள்கைகளை நன்கு உணர்ந்தவர்களாய், தோ
உணர்வுமிககவர்களாய், சுரண்டப்படும் வர்க்கத்தின்
மைப் பிரதிநிதிகளாய், சாதனையாளர்களாய், இருந்து
கின்றனர். அவர்களில் தோழர் குத்தூசி குருசாமி
களின் மறைவுக்குப் பின் அவர் பாதையில் பகுத்தறி
தர்ம இயக்கத்தை நடத்திச் செல்லும் 'அறிவுவழி' ஆ
தோழர் பஞ்சாட்சரம் அவர்களும், பெரியார் சமஉ
கழகத்தை நடத்திச்செல்லும் 'சிந்தனையாளன்' ஆ
தோழர் ஆனைமுத்து அவர்களும், அறிவியக்கத்தை
திச் சென்று அப்பெயரிலேயே இதழும் நடத்தும்
டாக்டர் சாலை இளந்திரையன் அவர்களும் குறி
தக்கவராவார்கள். தந்தை பெரியாரின் பேரியக்க
வீச்சு குறையாமல், அவர் கொள்கை வழிநின்று
படும் இவர்களின் இயக்கங்கள்தான் இன்றைய இளை
உற்று நோக்கிப் பயில வேண்டிய பெரியாரியல் பல்
கழகங்கள். இவைகளே பெரியாரியலைச் செயல்

னைந்துள்ள உண்மைப் பாசறைகள். தோழர் வீரமணி ன் விளம்பர இயக்கத்திலிருந்து முற்றிலும் மாறுபட்ட த்துவ பாட்டாளி வர்க்க உணர்வுடையப் பகுத்தறிவுப் ரியக்கங்கள் இவைகளே.

எழுத்துத்துறையில் தங்களை வளர்த்துக் கொள்ள த்தனிக்கின்ற இக்கால மாணவர்களும் இளைஞர்களும் ங்களுடைய ஆதர்ச புருஷராக ஏற்றுக்கொள்ளத்தக்கவர் காள்கைவேள் குத்தூசி குருசாமி ஆவார். இந்தத் மிழகத்தின் வரலாற்றை ஒவ்வொரு நாளும் விடுதலை ல் பலசரக்கு மூட்டை என்ற இரண்டு காலப்பகுதி ழுத்தாலேயே தன் விருப்பத்திற்கு திசைமாற்றி இழுத்துச் சென்ற அவரை இன்றைய மாணவர் உலகம் அறியாமல் ருப்பது அவர்களின் துர்ப்பாக்கியமே.

பார்ப்பனக் கொட்டம் அடங்கி ஒடுங்கி பிற்படுத்தப் பட்ட தாழ்த்தப்பட்ட நீதிபதிக்கு முன்னாலே தலை சாரிந்து நின்றதற்கு அவர் எழுத்துக்களே காரணம், வெள்ளையனிடமிருந்து நாட்டை மீட்டு ஓட்டுரிமை வாங்கித் தந்தவர்கள் தாங்கள் தான் என்று தம்பட் டமடித்து அதற்காக காருள்ளளவும், கடல் உள்ளளவும் தாமே இந்த நாட்டை ஆளத்தகுதி படைத்தவர்கள் என்று இறுமாந்திருந்த காங்கிரசின் மஞ்சள் பெட்டி இந்தியாவி லேயே தமிழகத்தில் தான் முதல் முதலாகக் கவிழ்க்கப் பட்டது

பாலோடும், தேனோடும் என்று நம்பிக்கைப்பாய் விரித் வர்கள், அரிசி ரேஷன் முறையைக் கொண்டுவந்த போது அவர்களுக்கு ஆறு அவுன்சு ஆட்சி என்று குத்தூசியாரின்

பேனா பெயர் சூட்டியது. காங்கிரஸ்காரர்கள் வெள்ளை யனுக்கு அஞ்சியதைவிட இந்தப் பெயர்ச்சொல்லுக்கு அஞ்சினார்கள். எந்தப்பக்கம் சென்றாலும் மக்கள் இவர் கள் மீது ஏளனவலை வீசினார்கள், இவருடைய எழுத்துக் குப் பயந்து அன்றைய முதல் அமைச்சர் ராஜாஜி பெரி யாரின் வீடு தேடிவந்து மன்னிப்புக்கேட்டதும் மாற்றி எழுதவேண்டிக்கேட்டுக் கொண்டதும் தமிழக அரசியல் வரலாற்றில் ஈரங்காயாத பக்கங்களாய் இன்னும் ஜொலிக் கின்றன,

இப்படியெல்லாம் எழுத்தால். பேச்சால், கிளர்ச்சிக ளால், தந்தை பெரியாரின் இயக்க உடலின் முக்கிய உறுப்பாய் இயங்கிவந்த குத்தூசி குருசாமி அவர்கள் 5(வரை காங்கிரசாருக்கும் அதற்குப் பிறகு தி. மு. க. வினருக் கும் சிம்ம சொப்பனமாய்த் திகழ்ந்து வந்தார். அவ விடுதலை ஆசிரியராகவும் திராவிடர் கழகத்தின் பொதுச் செயலாளராகவும் இருந்துவந்த காலம் திராவிட இயக்கத் தின் பொற்காலம்.

மிக அதிகமான படிப்பும், மிக ஆழமான சிந்தனையும் மிகத்தேர்ச்சியான போர்த்திறனும், எல்லாவற்றுக்கும் மேலாக துளியும் தன்னலமற்ற, இயக்க ஈடுபாடும் கொண்ட குத்தூசி குருசாமி அவர்கள் 1962-ல் தேர்தல் விஷயத்தில் கருத்து வேறுபாடு காரணமாக தந்தை பெரியாரை விட்டு விலகினார்.

கம்யூனிஸ்ட் தலைவர்கள் தலைமறைவாய் இருந் காலத்தில் அவர்களில் சிலருக்கு அரசாங்க அடக்குமுறைக் அஞ்சாமல் தஞ்சமளித்தவர் குத்தூசியார். சுயமரியாை

உணர்வோடு சமதர்ம உணர்வையும் இணைத்துப்பரப்பி வந்த பொருள் முதல்வாதி அவர்.

பெரியாரைவிட்டு அண்ணா விலகிய 49லிருந்து 62 வரை திராவிட இயக்கம் சந்தித்த கிளாச்சிகளும்' போராட்டங்களும். ஏராளம் ஏராளம்! இவைகளுக்குஉத்வேக மூட்டியவை குத்தூசி குருசாமி அவர்களின் எழுத்துக்களும், பேச்சுக் களுந்தான்! ஏறத்தாழ பன்னிரண்டு முறை சிறை சென்றவர் குத்தூசியார். இன்றைக்கும் திராவிட இயக்கத்தில் பல பெரியவர்களை அணுகிக் கேட்டால் அவர்கள் குத்தூசியாரின் எழுத்தால் கவரப்பட்டே இயக்கத்திற்கு வந்ததாகப் பெருமிதத்தோடு குறிப்பிடுவார்கள்.

இத்தகு ஆற்றல் வாய்ந்த குத்தூசியார் அவர்கள் பெரியாரை விட்டு விலகிய பின், 1925-ல் தந்தை பெரியாரால் தொடங்கப்பட்ட சுயமரியாதை இயக்கத்தை மீண்டும் புதுப்பித்தார்.

முதல் முதலாக வெளிநாட்டுப் பகுத்தறிவு நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டவர் குத்தூசியாரே. புரட்சிக் கவிஞர்பாரதிதாசனின் கவிதைத் தொகுதியை முதல் முதலாக வெளியிட்டவர் குற்தூசியாரின் துணைவியார் குஞ்சிதம் குருசாமி அவர்களே! பெரியாரை விட்டுப் பிரிந்த பின், குத்தூசியார் நடத்திய கும்பகோணம் சுயமரியாதை மாநாடு திராவிட இயக்க வரலாற்றில் ஒரு பொன்னேடு. பகுத்தறிவின்பாலும் அவர் கொண்ட ஈடுபாட்டின் வெளிப்பாடாகவே தம் மக்களுக்கு கௌதமன் என்றும் ரஷ்யா என்றும் பெயரிட்டார் குத்தூசியார்.

வாழ்நாள் முழுவதும் அவ்விரு கொள்கைகளுக்காகவே வாழ்ந்து தொண்டாற்றி வந்த குத்தூசியார் அவர்கள்

11-10-75ல் மறைந்தபின் அவர் நடத்தி வந்த இயக்கமும், அவருடைய அறிவுப் பாதை என்னும் பத்திரிக்கையும் தொடர்ந்து தோழர் பஞ்சாட்சரம் அவர்களால் பெரும் சிரமத்திற்கு இடையில் நடந்தப்பட்டு வந்தன. ஆறு மாதத் திற்குப் பின் சாதாரண தொழிலாளியான பஞ்சாட்சரத்தால் தாக்குப் பிடிக்க முடியாமல் போகவே அறிவுப் பாதை நிறுத் தப்பட்டு விட்டது.

பின்னர் 1976-ல் தோழர் ஜோதிசங்கர் போன்ற படிப் பாளிகளின் துணையோடு சுயமரியாதை இயக்கத்தைப் பகுத்தறிவு சமதர்ம இயக்கமாக மாற்றி அறிவுவழி என்ற ஒரு மாத இதழின் மூலம் தோழர் பஞ்சாட்சரம் அவர்கள் நடத்தி வருகிறார். தெளிவான பகுத்தறிவுக் கொள்கை யும் சமதர்மக் கோட்பாடும் கொண்டு மிக எளிய முறையில் இயங்கி வரும் இவருடைய இயக்கம், மார்க்சீயத்தையும், பெரியாரியலையும் தமிழகத்தில், குறிப்பாக சென்னையில் தாழ்த்தப்பட்ட. பிற்படுத்தப்பட்ட மக்களின் மத்தியில் ஆழ்ந்த ஈடுபாட்டோடு பரப்பி வருகின்றது.

தோழர் வீரமணியின் தி. க. வைப்போல் இத்தப் பகுத் தறிவு சமதர்ம இயக்கம் தாழ்த்தப் பட்டவர்களிடமிருந்தும் தொழிலாளர்களிடமிருந்தும் விலகிநிற்காமல் அவர்களோடு பின்னிப் பிணைந்து ஐக்கியப்பட்டு இயங்கி வருகின்றது.

இளைஞர்கள் இவ்வியக்கத்தின் பால் போதிய கவனம் செலுத்துவார்களேயானால் தமிழகம் முழுவதும் பகுத்தறிவு நெறியும், சமதர்மக் கோட்பாடும் பரவுவது எளிதாகும். ஏழு ஆண்டுகளாக மாதம் தவறாமல் தனியொருவராகவே மிக முயன்று தோழர் பஞ்சாட்சரம் இவ்வியக்கத்தின் கொள் கைகளைப் பரப்ப அறிவுவழி பத்திரிகையை கொண்டு வருகிறுர்.

பகுத்தறிவுத் தெளிவும், சமதர்ம நோக்கும் கொண்ட இளைஞர்களின் படைப்புக்களும் பொருளாதார ஊக்கமளிப்பும் இப்பத்திரிகையையும் இயக்கத்தையும் செழுமையாக்கக் கூடும். சென்னைப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும், தந்தைபெரியாரின்அப்பழுக்கற்றதொண்டருமான தோழர் நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் இவ்வியக்கத்தை இயக்கிவருவது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

அடுத்ததாக தில்லிப் பேராசிரியர் சாலை இளந்திரையனும், சாலினி இளந்திரையனும் இணைந்து இயக்கிவரும் அறிவியக்கம் பரிசீலனைக்கு உரியதாகும். தெளிவாக முற்போக்குவாதிகளான இவர்கள், தங்கள் சாட்டை எழுத்துக்களால், மாநாட்டுப் பேச்சுக்களால்‘வளைந்து கிடக்கும் தமிழனின் முதுகெலும்பை நிமிர்த்துவதில் முழுமுனைப்போடு இயங்கி வருகிறார்கள். ஏழை எளியோரை எழுச்சியுறச் செய்வதே இவர்களின் இலட்சியம்.

‘சேதாரம் இல்லாமல் நகை செய்ய முடியாது—சிலரேனும் மடியாமல் பகை வெல்ல முடியாது’ என்பதே இவர்களின் பாதை, அரசமைப்பைத் தகர்த்து, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவுவதில் அக்கறை காட்டும் இவர்கள் பெரியகுளம் தேர்தலில் மார்க்சிஸ்டு கட்சியை ஆதரிக்கும் பிறழ்ச்சிக்கு ஆட்பட்டிருக்கிறார்கள். 77 தேர்தலிலேயே ஜனதாவை ஆதரித்து இந்தப் பிறழ்ச்சிக்கு இவர்கள் முன்னுரை எழுதினார்கள்.

தத்துவத் தயாரிப்பில் தலை சிறந்து திகழும் இந்த அறிவு ஜீவிகள் பெரியாரை ஏற்றுக் கொண்ட பொதுவுடைமை வாதிகள் ஆவர். இவர்கள் நடத்திவரும்அறிவியக்கம் பத்திரிகை, தமிழக முற்போக்காளர்களுக்கு வெளிச்சக்

காரணங்களை வாரிவழங்குகிற அறிவுச் சூரியனாய் இயங்கி வருகின்றது.

ஏறத்தாழ அறுபதாண்டு காலமாய், தந்தை பெரியார்—எழுதினார்—தம் கருத்துக்களைச் சிறுசிறு நூல்களாக வெளியிட்டு வந்தார். அவருடைய இவ்வளவு பரந்து பட்ட பொதுத் தொண்டில் அவரிடமிருந்து தெறித்த அத்தனைக் கருத்துக்களும் முன்பின் முரணற்றதாய் உரிய பிரிவுகளில், தலைப்புக்களுடன் தொகுக்கப்பட்டு அவர் பார்வைககு வைக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டு ஆயிரக்கணக்கான பக்கங்களில் மூன்று பகுதிகளாய் (Volumes) வெளியிடப்பட்டு தமிழகம் முழுவதுமுள்ள நூலகங்களில் 'பெரியார் சிந்தனைகள்' என்ற பெயரில் வைக்கப்பட்டுள்ளன.

இது வெளிவந்த பின்தான் தந்தை பெரியாரின் தத்துவங்களை ஆராய்ந்து அறிஞர்கள் டாக்டர் பட்டம் பெறுவது தனி மனிதரான பழம்பெரும் பெரியார் தொண்டரும் சீரிய சிந்தனையாளருமான அறிஞர் ஆனைமுத்து அவர்களே திருச்சி சிந்தனையாளர் கழகச் சார்பில் இந்த இமாலயப் பணியைச் செய்து முடித்தார். அவர் தலைமை தாங்கி நடத்தி வரும் பெரியார் தொண்டர்களின் பாசறையே பெரியார் சம உரிமைக் கழகம். இந்த இயக்கம்தான் பெரியார் மறைவுக்குப்பின் தோன்றி, வடநாடு முழுவதிலும் தந்தை பெரியாரின் கொள்கைகளைப் பரப்பி. பீகார், இராஜஸ்தான் உத்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் இலட்சக்கணக்கானோர் பெரியார் தொண்டர்களாய் உருவாகக் காரணமான இயக்கம். இந்த இயக்கம்தான், மொரார்ஜி தேசாய் பிரதமராக இருந்தபோது அவரைச் சந்தித்து வற்புறுத்தி மண்டல் கமிஷனை அமைக்கச் செய்த இயக்கம்.

இந்த இயக்கத் தலைவர் ஆனைமுத்து அவர்களைத் தான் இந்நாள் குடியரசுத் தலைவர் ஜெயில்சிங் அவர்கள் 1981 ஜனவரி 25-ந் தேதி தான் உள்துறை அமைச்சராக இருந்தபோது அழைத்துப் பேசி, மண்டல் கமிஷன் அறிக்கையை பாராளுமன்றத்தில் வைக்க ஒப்புக் கொண்டார். இந்த இயக்கம் வட நாட்டில் விளைவித்த பெரியார் புகழ் என்னும் பயிரைத்தான் தோழர் வீரமணியின் தி.க.வினர் தமிழகத்தில் இருந்தபடியே தங்கள் விளம்பர சாதன வசதியால் அறுவடை செய்து கொண்டுள்ளனர்.

தாங்களே சோழனின் சொந்தக்காரர்கள், சேரனின் பேரர்கள், பாண்டியனின் பரம்பரையினர் என்றெல்லாம் வீரம் பேசிவந்த தி.க.வினர் பாதிப்பேர் சிறைக்குள்ளும் மீதிப்பேர் தங்கள் வீட்டுக்குள்ளும் ஒடுங்கிக்கிடந்த காலம். தி.மு.கவை விட்டுப்பிரிந்து போய், முதலாளித்துவம், சோசலிசம், கம்யூனிசம் ஆகிய மூன்றும் கலந்த அண்ணாயிசம்-பாயசம் என்றெல்லாம் கொள்கைக் குழப்பத்தை முன்னிறுத்தி அ தி.மு.க ஆனவர்கள் தங்களை அகில இந்திய ரீதியில் நீட்டிக் கொண்டிருந்த காலம். வலது கம்யூனிஸ்டுகள் அடக்கு முறைக்கு ஆதரவு தெரிவித்த காலம். இடது கம்யூனிஸ்டுகள் தைரியமாக தங்கள் மனதுக்குள்ளேயே எதிர்ப்பு தெரிவித்த காலம். இந்தியா முழுவதும் 67-லேயே கொம்பு உடைக்கப்பட்ட காங்கிரஸ் காளை மாடு துள்ளிக் குதித்த காலம். அந்த காலம் தான் நெருக்கடி நிலைக் காலம்.

தமிழகத்தில் வீராதி வீரரெல்லாம் இப்படி தேசிய வேடமிட்டு அஸ்தமித்துக் கொண்டிருந்த 1976-ல் தந்தை பெரியாரின் உயிர்மூச்சுக் கொள்கைகளான தனித் தமிழ் நாடு

சுயமரியாதை, சாதி ஒழிப்பு, வகுப்புரிமை,சமதர்மம் ஆகிய வற்றை முன்னிறுத்தி உதயமானதுதான் பெரியார் சம உரிமைக் கழகம். வீரமணி தி.க.வினர் 1973-ல் தந்தை பெரியார் மறைந்த போது அவருக்கும் அவர் கொள்கைக்கும் சேர்த்து சமாதிகட்டி மலர் வளையும் வைத்து வணங்கியதைக் கண்டு மனம் பொறுக்காமல் வெளியேறிவர்களின் கூடாரம் இது.

கடவுள் மறுப்பு, பார்ப்பன எதிர்ப்பு என்பதை மட்டுமே கொண்டிராமல் தந்தை பெரியாரின் சமூக நீதிக்கொள்கையான வகுப்புரிமைக் கொள்கையை இந்தியா முழுவதும் செயலுக்கு கொண்டுவரத்திட்டம் தீட்டி செயல்பட முனைந்தனர். வேலைவாய்ப்புக்கள் அதிகமாகப் பெருகி வருகிற மத்திய அரசு உத்தியோகங்களில் பிற்படுத்தப்பட்டோருக்கு ஒதுக்கீடே இல்லாமல் இருப்பது அரசியல் நிர்ணய சட்டத்திற்கே விரோதமானது. இந்தியா முழுவதும் தாழ்த்தப்பட்டோருக்கு ஏட்டளவிலே உள்ள ஒதுக்கீடு சரியான விதத்தில் அவர்களுக்கு அளிக்கப்படாமல் காலங்காலமாய் வஞ்சிக்கப்பட்டு வருகிறார்கள். இதை எதிர்த்துப் போராடி சமூக நீதியை நிலைக்கச் செய்ய பெரியார் சமஉரிமைக் கழகத்தினர் செயலில் இறங்க முடிவெடுத்தனர்.

1977 தேர்தலில் இவர்கள் எந்த அரசியல் கட்சியையும் ஆதரிப்பதில்லையென்று, முடிவெடுத்தனர். ஏனெனில் வகுப்புரிமையை முழுமையாகப் பெறவோ, சாதியை ஒழிக்கவோ எத்தக் கட்சியும் முனையவே இல்லை. 1978 மார்ச்சில் இந்திய பாராளுமன்றத்தில் பிற்படுத்தப்பட்டோருக்கு 60 விழுக்காடு ஒதுக்கீடு வேண்டுமென்று ஜனதா கட்சி எம். பி. யான தோழர் விநாயக்ராம் பிரசாத் என்பவரால் கொண்டு

வரப்பட்ட தனிநபர் மசோதாவை பிரதமர் மொரார்ஜ
தேசாய் அவர்களால் கட்டாயப்படுத்தி திரும்பப்பெற
செய்யப்பட்டது.

இதைக் கேள்விப்பட்ட பெரியார் சம உரிமைக்கழக
தினர் வட இந்தியாவில் பெரியாரின் சமூக நீதி, சாதிஒழி
புக்கொள்கைகளைப் பரப்பவும், வகுப்புரிமைக்காக அரசா
கத்திடம போராடவும் வட இந்தியக்சுற்றுப்பயணத்தை
மேற்கொண்டனர். ஆங்கிலத்திலும், இந்தியிலும் வகுப்பு
மையை வலியுறுத்துகிற அறிக்கைகளைத் தயாரித்து
கொண்டு சென்றனர். இதற்கு தோழர் ராம் அவதேஷ்சி
எம். பி. பெரிதும் உறுதுணையாக இருந்தார். உத்திர
பிரதேச மாநில பிற்படுத்தப்பட்டோர் மாநாடு 7-6-
அன்று முசாபர் நகரில் நடைபெற்றது. அதில் பங்கேற்
பெரியார் சமஉரிமைக்கழகத்தினர் உரையாற்றியதோ
வகுப்புரிமை பற்றிய அறிக்கைகளையும் அங்கு பரப்பின

உ. பி., பீஹார் ஆகிய மாநிலங்களின் பிரதிநிதிக
பற்கேற்ற அகில இந்திய பிற்படுத்தப்பட்டோர் தாழ்த்
பட்டோர் மாநாட்டை சென்னையில் பெரியார் சமஉரிமை
கழகத்தினர் கூட்டினர். இம்மாநாடு பெரியார் கொள்
களை பிரதிபலிப்பதாக இருந்தது, பெரியாரின் வா
என்றும், தமிழரின் தளபதி என்றும் தம்பட்டமடித்
கொண்டிருக்கும் தோழர் வீரமணியின் தி, க. வினர் இ
மாநாட்டிற்குப் பெரியார் திடலை வாடகைக்கு கூடத்
வில்லை.

1978 செப்டம்பர் 16 முதல் அக்டோபர் 18 மு
மீண்டும் பீஹார் மாநிலம் முழுவதிலும் தோழர் ஆ
முத்து, சீர்காழி முத்துசாமி, து. மா. பெரியசாமி, நா

செந்தமிழ்க்கோ ஆகிய பெரியார் சம உரிமைக் கழகத்தினர் சுற்றுப்பயணம் செய்து பெரியார் பிறந்தநாள் விழா கொண்டாடி, வகுப்புரிமைக் கொள்கை பற்றிப்பிரச்சாரம் செய்தனர். இதன் விளைவாகத்தான் முதல் முறையாகப் பீஹார் மாநிலத்தில் 31-10-78-ல் பிற்படுத்தப்பட்டோருக்கு 20% ஒதுக்கீடு வழங்கப்பட்டது. இதை எதிர்த்துப் பார்ப்பனர் போராடினர். பெரியார் கொள்கைக்கு வடநாட்டில் கிடைத்த முதல் வெற்றி இது.

இந்த இயக்கத்தினர் ஏற்படுத்திய எழுச்சியினால் விழிப்படைந்த பீஹார் மாநில பிற்படுத்தப்பட்டோர், அன்றைய பிரதமர் மொரார்ஜி தேசாய் அவர்களை, பீஹார், ராஞ்சி ஜாம்ஷெட்பூர் ஆகிய ஊர்களில் நடைபெற்ற கூட்டங்களில் பேச விடாமல் கல்லால் அடித்துத் துரத்தினர். காகாகலேல்கர் கமிஷனை அமுல்படுத்தக் கோரினர். இதன் விளைவாகத்தான் 31-12-78-ல் மொரார்ஜி தேசாய் அவர்கள் மண்டல் கமிஷனை அமைத்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

25-3-78-ல் பெரியார் சம உரிமைக்கழகத்தினர் டில்லியில் மாபெரும் பிற்படுத்தப்பட்டோர் பேரணி ஒன்றினை ஏற்பாடு செய்து நடத்தினர். தந்தை பெரியார் அவர்களின் வகுப்புரிமை கொள்கை விளக்க எழுத்துக்கள், பேச்சுக்கள் ஆகியவை அடங்கிய இந்தி நூல் ஒன்றினைத் தயாரித்து அப்போதைய மத்திய சுகாதார அமைச்சர் இராஜ்நாராயணன் அவர்களைக் கொண்டு இவ்வியக்கத்தினர் வெளியிட்டனர்.

1979 அக்டோபரில் சேலத்தில் அகில இந்திய மாநாடு ஒன்றைக் கூட்டி உத்திரப்பிரதேச முன்னாள் முதல்வர்

இராம்நரேஷ்யாதவ், தோழர் இலவனம், பீஹார் மாநிலத்தவரான ஜவகர்பிரசாத், தி.மு.க. தலைவர் தோழர் கருணாநிதி, தோழர் தா. பாண்டியன் ஆகியோரைப் பங்கு கொள்ளச் செய்தனர்.

நீதிக்கட்சி ஆட்சிக்காலத்தில் தமிழர் தலைவர்கள், சாதி உணர்வு நடைமுறையிலும், சட்டப்பாதுகாப்போடும் இருக்கும் வரை, இந்தச் சாதி அடிப்படையில் கல்வியிலும் சமூக அந்தஸ்திலும் 'உயர்ந்துள்ள பார்ப்பனருக்கும் மேல்சாதியினர்க்கும் சமமாகத் தாழ்த்தப்பட்டோரும் பிற்படுத்தப்பட்டோரும் உயரவேண்டுமென்று நிர்வாக உத்தரவுகளின் மூலம் அவர்களுக்கு ஒதுக்கீடு வழங்கிவந்தனர். இதை முன்மாதிரியாகக் கொண்டு மத்திய அரசு உத்தியோகத்திலும் நிர்வாக உத்தரவுமூலம் ஒதுக்கீடு வழங்குங்கள் என்று 15-11-79 முதல் 1-12-79 வரை பெரியார் சம உரிமைக் கழகத்தினர் டில்லியில் போராட்டம் நடத்தினர். 16-12-79 வரை ஏறத்தாழ 1900 பேர் டில்லிதிஹார் சிறையில் ஆண்களும் பெண்களுமாய் அடைபட்டுக் கிடந்தனர். இவ்வளவு செய்திகளும் தோழர் வீரமணி தி. க. வினர் தங்கள் பத்திரிகைகளில் வெளிவராமல் வெகுஜாக்கிரதையாகப் பார்த்துக் கொண்டனர்.

16-2-82-ல் பிற்படுத்தப்பட்டோரின் கதி என்ன? (Whither Backward Classes) என்ற ஆங்கில நூலை எழுதி அச்சிட்டு தோழர் ஆனைமுத்து அவர்கள் இலவசமாகவே 760 எம். பி. க்களுக்கு அனுப்பிவைத்தார். இதன் பயனாகத்தான் பாராளுமன்றத்தில் எம். பி. க்கள் மண்டல் கமிஷனை அமல்படுத்தச் சொல்லி விவரத்தோடு வாதாட முடிந்தது. 25-2-82-ல் லக்னோவில் நடந்த பிற்படுத்தப்பட்டோர் பேரணியில் தோழர் ஆனைமுத்துவும், சித்தையன்

அவர்களும் பங்கேற்றனர். 4-3-82-ல் மாண்புமிகு ஜெயில் சிங் அவர்களை இவ்விருவரும் சந்தித்து சாதி அடிப்படையில் மட்டுமே ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்பதற்கான நியாயங்களை விளக்கி தெளிவுப் படுத்தினர். இப்படி இவர்களால் விவரம் புரிந்தவராக ஆன ஜெயில்சிங் அவர்கள் உள்துறை அமைச்சராக நீடித்தால் பார்ப்பனக் கொட்டம் பாழ்பட்டுப் போகும் என்பதுணர்ந்தே அவர் குடியரசுத் தலைவராக்கப்பட்டுக் கோயில் கோயிலாக சுற்றவிடப்பட்டிருக்கிறார் போலும் !

இந்தியாமுழுவதும் இப்படி வகுப்புரிமைக்கானபோராட்டச் சூழலை உருவாக்க முனைந்து அதில் வெற்றியும் கண்ட இவ்வியக்கத்தினர் தமிழகத்தில் தந்தை பெரியாரின் தனிநாடு கோரிக்கையில் உள்ள நியாயம், ஆர். எஸ். எஸ். இயக்கம் தமிழகத்தில் வேரூன்ற முனைவதில் உள்ள தீமை, பிற்படுத்தப்பட்டோர் தாழ்த்தப்பட்டோர் ஒன்றிணைந்து மேல் சாதி ஆதிக்கத்தை எதிர்த்துப் போராட வேண்டிய அவசியம், பெரியாரின் இறுதிலட்சியம் பொது உடைமையே என்பவை பற்றியெல்லாம் மக்களிடம் ஓயாமல்பிரச்சாரம் செய்து வருகின்றனர்.

வேலையில்லாத் திண்டாட்டம், முதலாளித்தவ அமைப்பில் செயற்கையாய்த் தோற்றுவிக்கப்பட்டும், பாதுகாக்கப்படும் என்பதை தத்துவார்த்தமாக உணர்ந்துள்ள இவர்கள் வேலையின்றித் தவிக்கும் இளைஞர்களை அணிதிரட்டி முதலாளித்துவ அமைப்பை எதிர்த்துப் போராட முனைந்திருப்பின் சிறப்பாக இருக்கும். சட்டப்படி கடவுள் படங்கள் அரசு அலுவலகங்களில் இருந்து அகற்றப்பட வேண்டும் என்பதற்காக போராட இவர்கள் எடுத்திருந்த முடிவை

இன்னும் செயல்படுத்தவில்லை. இவற்றில் இவர்கள் கவனம் செலுத்துதல் இன்று பெரியார் தொண்டர்களில் சமதர்ம எண்ணம் கொண்ட பேரமைப்பான இவ்வமைப்பினர்க்கு எளிதானதும் அவசியமானதும் ஆன பணியாகும்.

தந்தை பெரியார் ஏறத்தாழ 60 ஆண்டுகள் தமிழகம் முழுவதும் சுற்றிச் சுழன்று பணியாற்றி ஒரு மிகப்பெரிய சமுதாயப் புரட்சிக்கு வித்திட்டார். ஆனால் இதைப்பேணி பாதுகாத்து, இப்புரட்சிப் பயிரை விளைவித்து, சமூக நன்மையை அறுவடை செய்ய, இன்று எந்த அரசியல் கட்சிகளும் தம்மை அற்பணித்துக் கொள்ளத்தயாராயில்லை. தோழர் வீரமணியின் தி. க. வோ எதிர்ப் புரட்சியின் பக்கம் தலை சாய்த்துக்கொண்டு, விளம்பரக்காலை நீட்டி ஓய் வெடுத்துக் கொண்டுள்ளது. இந்நிலையில் பெரியார் சம உரிமைக்கழகம், அறிவியக்கம், பகுத்தறிவுச் சமதர்ம இயக்கம் ஆகிய இயக்கங்கள் பெரியாரியலைச் செயலுக்குக் கொண்டுவரத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டுள்ளன

இவற்றை ஆராய்வதும், இவற்றின் பணிகளில் ஈடுபட்டு பெரியாரியலை மக்களிடம் கொண்டு சென்று அய்க்கியப் படுத்தி நாளைய சமுதாயத்தைப் புரட்சிகரமாக்குவதும். இன்றைய இளைஞர்களின் முன்னுள்ள பணிகளாகும்.

பெரியார்தாசன் அவர்களின் கட்டுரைத் தொடருக்கு விடுதலை ஆசிரியர் குழுவினர் அளித்த பதில்கள்

★ பெரியாருக்குப் பின் திராவிடகழகம் முதலாளித்துவ சிந்தனை கொண்டவர்களால் நடத்தப் படுகிறது என்று கூறுவதுபற்றி உங்கள் கருத்து என்ன? உதாரணமாக அரசின் வேலை நிறுத்தச் சட்டத்தை ஆதரித்தது.

பெரியார் வேலை நிறுத்தம் என்பது முதலாளித்துவத்தை பயமுறுத்தும் ஒரு ஆயுதமாக இருக்க வேண்டுமேயொழிய அது தொழிலாளர்களால் எப்போதும் பயன் படுத்தப்படுவதால் பலவீனமடைந்து போகிறது இறுதிக் கட்டத்தின் அடைக்கல மாகத் தான் இருக்க வேண்டும் (Strike must be the last resort) என்றுகூறியுள்ளார். அதே நோக்கத்துடன்தான் பெரியார் அவர்களும் பொன்மலை இரயில்வே போராட்டத்தில் தொழிலாளர்கள் நசுக்கப்பட்ட கடைசி கட்டத்தில் அவர்களை ஆதரித்து சிறை சென்றார். அந்த முறையில் நாங்களும் எடுத்ததற் கொல்லாம் வேலை நிறுத்தம் செய்யக் கூடாது என்னும் அடிப்படையில் அரசின் வேலை நிறுத்த தடைச் சட்டத்தை ஆதரித்தோம். எனவே பெரியாருக்குப் பின் திராவிடர் கழகம் முதலாளித்துவ சிந்தனை

கொண்டவர்களால் நடத்தப்படுகிறது என்பது முற்றிலும் மாறானது.

★ வகுப்புரிமைக்காக போராடும் உங்கள் இயக்க அறக் கட்டளையில் (Periyar Trust Board) பெரியார் காலத்தில் இரண்டு தாழ்த்தப்பட்டவர்கள் இடம் பெற்றிருந்ததைப் போல தற்போது ஏன் ஒருவர் கூட இடம் பெறவில்லை ?

தற்போதுள்ள அறக்கட்டளை பெரியார் அவர்களால் உருவாக்கப்பட்டதே. எங்களால் அமைக்கப்பட்டது அல்ல. பெரியார் காலத்தில் இடம் பெற்ற இரு தாழ்த்தப்பட்டவர் களும் சாதி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் அல்ல. சாதி சமயங்களை ஒழிக்கப் போராடும் இவ்வியக்கத் தின் கொள்கைக்கு அங்ஙனம் தேர்ந்தெடுப்பதே முற்றிலும் முரண்பாடானது. தாழ்த்தப்பட்டவர்கள் அறக்கட்டளை யில் இடம் பெற நாங்கள் தடுப்பதில்லை.

★ திருப்பத்தூரில் நக்சலைட்டுகள் என்று சுட்டுக் கொன்ற போதும், மாயா தியாகியை போலீஸ் கற்பழித்து கொன்ற போதும், ஆங்காங்கே வகுப்புக்கலவரங்கள் நடந்த போதும் தி. க. ஒன்றும் செய்யாதது ஏன்?

மாயாத் தியாகி கற்பழிப்புப் பற்றி நாங்கள் விடுதலை பத்திரிகையில் கட்டம் கட்டி முதல் பக்கத்திலே செய்தி வெளியிட்டிருந்தோம். இதைத் தவிர எங்களால் வட மாநிலங்களில் சென்று ஒன்றும் செய்ய முடியாததாய் இருந் தது. வகுப்புக் கலவரங்கள் நடந்த இடங்களுக்கெல்லாம் திரு. வீரமணி அவர்கள் நேர்முகமாகச் சென்று ஆறுதல் கூறியுள்ளார்.

★ பார்ப்பனரை எதிர்க்கும் உங்கள் இயக்கம் சுண்டல் விற்கிற பார்ப்பானையும். T.V.S. முதலாளி பார்ப்பானையும் ஒரு வர்க்கக் கண்ணோட்ட மின்றி பார்ப்பது ஏன்?

சுண்டல் விற்பவராக இருந்தாலும் வேறு வேலை செய்பவர் களாக பார்ப்பனர்கள் இருந்தாலும், பிறப்பிலேயே அவர் களுக்கென்று ஒரு சமூக அந்தஸ்து இருப்பதால் ஒட்டு மொத்தமாக அவர்களை எதிர்ப்பது தவிர வேறு வழியில்லை.

★ பெரியார் அரசியல் வாதிகளை ஓட்டுப் பொறுக்கிகள் என்று கூறி அரசியல் சக்திகளிலிருந்து விலகியிருந்தார். ஆனால் தற்போது தி. மு. கவை முழுவதுமாக ஆதரிப்பது ஏன்?

பெரியார் தனது கொள்கைக்கு ஒத்து வந்த எந்த கட்சி யையும் ஆதரித்து வந்தார். அது சமுதாயத்தின் நன்மைக் கண்ணோட்டத்தில் இருந்தது. அது போல நாங்களும் எங்கள் கொள்கைக்கு ஆதரவாக இருக்கிற தி. மு. க. வை ஆதரிக்கிறோம்.

★ அப்படியென்றால் அதிமுக பிற்படுத்தப் பட்டவர் களுக்கு 50./. இட ஒதுக்கீடு கொடுத்ததே அவர்களை ஏன் ஆதரிக்கவில்லை.

அதற்காக எம். ஜி. ஆரை நாங்கள் பாராட்டினோம். பாராட்டுக் கூட்டங்கள் நடத்தினோம், எம். ஜி. ஆர். ஒரு நாளைக்கு ஒருவேடம் போடுவார். அவரை நாங்கள் நம்பத் தயாராக இல்லை. அதே சமயம் அதிமுக அரசு செய் கின்ற எல்லா நல்ல காரியங்களையும் நாங்கள் பாராட்டிக் கொண்டுதான் இருக்கிறோம்.

★ காகா கலேல்கர் கமிஷனை அமல்படுத்தச் சொல்லி மொரார்ஜி தோசயை ஏன் அணுகவில்லை?

மொரார்ஜி தேசாய் ஒரு பார்ப்பனர். நேருவுக்கும் இவருக்கும் எந்த வித்தியாசமும் இருப்பதாக தெரியவில்லை, இவரை அணுகுவதால் எந்த பயனும் இல்லை யென்று தெரித்ததால் நாங்கள் முயற்சிக்க வில்லை.

★ தோழர் ஆனைமுத்து அவாகள் மொராஜியை சந்தித்து பேசியதன் வினளவாகத்தான் மண்டல் கமிஷனை அமைத்தார் என்பது பற்றி உங்கள் கருத்து?

ஆனைமுத்து எந்த விதமான அடிப்படை வேளைகளை யும் செய்யாமல் தனது செல்வாக்கினால் மொரார்ஜியை சந்தித்து பேசினார். இதனால் மட்டுமே மண்டல் கமிஷனை அமைக்கவில்லை.

★ உங்கள் கட்சியின் முக்கியப் பிரமுகர்கள் வீட்டுத் திருமணங்களிலேயே சடங்குகளை யெல்லாம் மறைமுகமாக செய்து விட்டு பிறகு சீர்திருத்த திருமணம் செய்து வைக்கீறீர்களே ஏன்?

சீர்திருத்த திருமணம் செய்து கொள்ள முன்வருவதே பழமையிலிருந்து மீள்வது ஆகும். அதுமுற்றிலும் மாறுபட்டடதாக இல்லாமலிருந்தாலும், உற்சாகப் படுத்த வேண்டும் என்ற வகையில் நாங்கள் இத்திருமணங்களைச் செய்து வைக்கிறோம்.

இப்படி சில சடங்குகளோடு செய்த சீர்திருத்த திருமணத் தம்பதிகள் பின்னர் தங்கள் தாலிகளையே கழற்றி அன்பளிப்பாக கொடுக்கும் வகையில் அவர்களது முற்போக்கு சிந்தனை வளர்ந்திருக்கிறது.

★ 1978 செப்டம்பரில் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க இளைஞர்களை ஒன்று திரட்டி பேரணி தடத்துவாக அறிவித்து இதுவரை நடத்தாததும் இதை முழுமையாக ஒழிக்க எந்த திட்டமும் வைத்திருக்காததும் ஏன்?

இளைஞர்களை முழுவதுமாக ஒன்று திரட்டாவிட்டாலும் ஆங்காங்கே ஊர்வலம் நடத்தியிருக்கிறோம் வேலையில்லாத் திண்டாட்டம் முழுமையாக ஒழிய சமூக அமைப்பே மாற்றப்பட வேண்டும். ஆகவே எங்களிடத்தில் எந்த திட்டமும் தனியாக வைத்திருக்கவில்லை.

★ பெரியாரின் எண்ணப்படி குழந்தைகளுக்கான பகுத்தறிவு புத்தகங்கள் இது வரையிலும் வெளியிடப் படாதது ஏன்?

தற்போது தான் இதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. குழந்தைகளுக்காக இதழ் நடத்த பல முறை முயன்றும் பதிவு எண் (Registration) அரசிட மிருந்து பெற இயலாமல் போய்விட்டது.

★ பெரியார் திடலில், விடுதலை பத்திரிகையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு மாதம் 90 ரூபாய் சம்பளம் கொடுத்தது பற்றி........?

பெரியார் திடலில் விடுதலை பத்திரிகையில் பணிபுரிபவர்கள் அனைவரும் இயக்கத்தின் மீது கொண்ட ஆவலினாலே தவிர சம்பளம் எதிர்பார்த்து வேலை செய்பவர்கள் அல்ல. இப்படி குறை கூறுபவர்கள் இயக்கத்திலிருந்து வெளியேறியவர்களே.

நேற்று - இன்று - நாளை

பேரன்புடைய தோழர்களே !

1965 வாக்கில் என் மாணவப் பருவத்தில் தந்தை பெரியாரின் பேச்சை முதன்முதலாகக் கேட்டேன். பக்தியும் மூடநம்பிக்கையும் என் படிப்பை மீறிப்படிந்திருந்த என் மனக்குளத்தில் முதல் சலனத்தை ஏற்படுத்திய கல் அது, குழம்பிய என்னைத் தெளிவுபடுத்த பல இரவுகளைச் செலவழித்தார் அருமைப் பெரியவர் அறநெறி மன்றத் தலைவர் தோழர் டி.ஜி. குருபூஷணம் அவர்கள்.

என் இலக்கிய ஆர்வமும், கவிதை ஆக்கும் திறனும் பெரியாரியக் கருத்துக்களால் அர்த்தமுள்ளவை ஆன போது திராவிடர் கழக மேடைகளில் கொடிகளுக்கு அடுத்தபடியாக நான் ஒரு கட்டாய அம்சமானேன். தமிழகம் முழுவதும் என் பேச்சு பற்றி பேசப்பட்டது.

போட்டி, பொறாமை போன்றவை தோன்றி வலுப் பெற்றபோது தி. க. விலிருந்து வெளியேற்றப்படக் காரணங்கள் கண்டுப்பிடிக்கப்பட்டன. இயக்கத்தின் பால் இளைஞர் கூட்டத்தை ஈர்க்கிற ஆற்றலை எனக்குள் ஏற்படுத்தி ஊக்குவித்தவர் தி. க. பொதுச் செயலாளர் தோழர் வீரமணி அவர்கள்தான். இந்த ஆற்றல் அளவற்றுப் போவது ஆபத்து என்று எண்ணியதால் தி. க. தலைமை என்னை விலக்கியது.

தந்தை பெரியார் சிந்தனைகளைத் தொகுத்தவரும் சீரிய சிந்தனையாளருமான தோழர் ஆனைமுத்து அவர்கள் நடத்தி வந்த பெரியார் சம உரிமைக் கழகத்தோடு என்னைப் பிணைத்து வைத்தார் அன்புத் தோழர் புலவர் யுவராசன் அவர்கள். கடைசி பந்திக்குப் பாயாசம் ஊற்றுகிற பையன்போல் ஒதுங்கிச் சேர்ந்த என்னை மிகக் குறுகிய காலத்திலேயே முதல் பந்தியின் உபசரிப்புப் பெறுபவனாக உயர்த்தினார்கள் தோழர் ஆனைமுத்து,

தோழர் சீர்காழி முத்துசாமி, பெரியவர் தோழர் சேலம் சித்தையன் போன்றவர்கள், பெரியார் சமஉரிமைக்கழகம் செய்த அனைத்து ஆக்கப் பணிகளிலும் முழு மனத்தோடு ஈடுபட்டுத் தோள் கொடுத்து வந்தேன். என் பேச்சால் ஈர்க்கப்பட்ட தோழர்கள் நாளும் இணைந்து வந்ததால் பெரியார் சமஉரிமைக் கழகம் என்கிற சிற்றோடை பேராறாகப் பெருக்கெடுக்க என் பங்கும் உதவியது. அறிவியல் ரீதியாக இயக்கம் நடத்துவது எப்படி என்பதை தோழர் ஆனைமுத்துவிடம் என்னால் கற்க முடிந்தது.

பெ. ச. க. வின் கொள்கைகளான தந்தை பெரியாரின் பகுத்தறிவு, பொதுவுடைமைக் கொள்கைகளை முழுமையாக மையமிட்டு இயங்கி வரும் பகுத்தறிவுச் சமதர்ம இயக்கத்தோடு தோழர் நாத்திகன் கேசவனால் எனக்குத் தொடர்பு ஏற்பட்டது. பெ. ச. க. வில் இருந்து கொண்டே கருத்தொருமை காரணமாகப்' பகுத்தறிவு சமதர்ம இயக்க நடவடிக்கைகளில் பங்குகொண்டு செயல்பட்டு வத்தேன். இதை எழுதுகிற இந்த நிமிடம்வரை (27-7-83 காலை 9 மணி) நான் பகுத்தறிவு சமதர்ம இயக்கத்தில் உறுப்பினன் ஆகவில்லை.

பகுத்தறிவு சமதர்ம இயக்க நலனுக்கான என் செயற்பாடுகள் கொள்கைக்குக் குந்தகமானவை அல்ல என்றாலும் பெ. ச. க தலைமை என்னை விலக்கி விட்டதாக அறிகிறேன், சரி! இனி என்பால் ஈடுபாடு கொண்ட தோழர்கள் அனைவருக்கும் சொல்கிறேன்! இனி நாம் பகுத்தறிவுச் சமதர்ம இயக்கத்தில் முழுமையாக இணைந்து செயல்படுவோம். பாரம்பரியப் பெருமை மிக்க இவ்வியக்கத்தை தமிழகம் முழுவதும் பரப்புவோம்! வாருங்கள் ஒத்துழைப்பு தாருங்கள்!

தோழமையுடன்

பெரியார்தாசன்

நன்றி : அறிவுவழி, ஆகஸ்ட் 1983